
ஸ்ரீ : ஸ்தோத்ரம் 3

...வாளமாமுனிகளே

(க)



மணவாள மாமுனிகள் வைப...

மணவாள மாமுனிகள் திருவடித்தாமரைகளைத்
திருமுடியிற் கொண்ட

ஸ்ரீ வைஷ்ணவ ஸௌபாக்யம்

(பொழிப்புரையுடன்)

இவை

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்
இயற்றியவை.

சென்னை
...ராடல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன.

1943 [0-12-0

http://acharya.org

...ளவாளமாமுனிகளே (க)

श्रीः

श्रीमद्वरवरमुनये नमः ।

மணவாளமாமுனிகள் திருவடிகளே ச...

श्रीवैष्णवसौभाग्ये

॥ श्रीशैलेशदयापात्रस्तोत्रम् ॥

ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யத்தில்

ஸ்ரீசைலேசதயாபாத்ரஸ்தோத்ரம்.

———:(O):———

शं नो मित्र इतीरयन्तु कतिचिच्छं नो भवत्वर्यमे-
त्येवं केचन पश्यतां मम पुनस्तत्तादृशीषूक्तिषु ।
श्रद्धालेशलवोऽपि नास्ति, सततं जिह्वा ममाम्रेडयेत्
शं नो रम्यवरोपयन्तृयमिराड् भूयादितीमामृचम् ॥ १ ॥

(பொழிப்புரை.) * ஶம் நோ மித்ர: * என்றும் ஶம் நோ பவத்வர்யமா * என்றும் சொல்லுமவர்கள் அப்படியே சொல்லிக் கொண்டிருக்கட்டும்; அடியேனுக்கு அந்தவகையான உக்திகளில் சிறிதும் ஆஸ்தையில்லை; ஶம் நோ ரம்யவரோபயந்த்ருயமிராட் பூயாத் * [மணவாள மாமுனிகள் நமக்கு க்ஷேமங்கரராகக் கடவர்] என்று

http://acharya.org

...ரு காக்கு அகவாசகம் ஆவ்ருத்தி
(க)

...कतिचिद्रामानुजेति ध्रुव-
...माधवाच्युत हरे नारायणेतीतरे ।
...न मा स्म निपतत् कर्णे मदीये पुनः
...व्यवरोपयन्नमुनिरित्याख्यैव कर्णामृतम् ॥ २ ॥

ரங்கம் ரங்கமிதி ப்ரூயாத் க்ஷுத்ப்ரஸ்கலனாதிஷு *
...கிற சாஸ்த்ரத்தை யநுஸரித்து இருமல் தும்மல்
...ரில் ரங்கம் ரங்கமென்பாரும், ஆசார்ய நாம ஸங்கீர்த்
தனமே உத்தேச்ய மென்று கொண்டு 'ராமாநுஜ!'
என்பாரும், கேசவா! மாதவா! என்று பகவந்நாம கீர்த்
தனம் பண்ணுவாரும் இவ்வுலகில் பலர் இருக்கட்டும்.
அப்படிப்பட்ட கீர்த்தனங்கள் என் காதில் விழவேண்
டா; மணவாளமாமுனிகளென்கிற திருநாமமே எனக்
குக் கர்ணாம்ருதமாகும். (உ)

ईशानोऽपि न दैवतं न च विधिर्नो वासवो नार्यमा
किं तु श्रीपतिरेक एव भगवान्नारायणो दैवतम् ।
इत्येवं कथयन्ति वैदिकवराः चित्तं मदीयं पुनः
सिद्धान्तं सुदृढं बिभर्ति वरयोगीन्द्रः परं दैवतम् ॥ ३ ॥

“சிவன் பிரமன் இந்திரன் ஸூர்யன் இவர்கள் ...
வரும் தெய்வமன்று, ஸ்ரீமந் நாராயணனே பரதெய்வ...
என்று வைதிகர்களின் ஸித்தாந்த மிருக்கட்டும். அ...

http://acharya.org

ளுள்ளத்திற் பதிந்த விந்தார்த்தம் மணவாளமாமுனிகளே
பரதெய்வமென்று. (௩)

शक्तो नैव रमापतिस्सुमधुरैस्सूक्तैर्बुधानां मनो
हर्तुं, किंतु पराशरप्रभृतिभिर्विश्वयामहे तद्गिरा ।
आचार्यो वरयोगिराडिह भुवि स्थैरं समेत्य स्वयं
सूक्तीर्दिव्यसुधामयीरुपदिशन् विद्वन्मनः कर्षति ॥ ४ ॥

எம்பெருமானை பரதெய்வமென்று கொண்டாடப்பட்டாலும் அப்பெருமான் செவிக்கினிய செஞ்சொற்களாலே விவேகிகளின் மனத்தைக் கவர வல்லவனல்லன் ; ஏன் ? ஸ்ரீ விஷ்ணு புராணம் பகவத்கீதை முதலியவற்றில் அப்பெருமானருளிச்செய்த திவ்ய ஸூக்திகள் பல இல்லையோ வென்னில், வ்யாஸ பராசராதி மஹர்ஷிகள் எதையோ எழுதிவைத்து பகவத்வாக்யமாக நம்மை வஞ்சிக்கிறார்களத்தனை ; மணவாளமாமுனிகளோ வென்னில் அப்படியல்லாமல் நேராகத் திருவவதரித்தருளி அமுதமன்ன மென்மொழிகளைத் தாமே யருளிச்செய்து அறிஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றார். (௪)

ऐश्वर्यं किमपि प्रपद्य कतिचिल्लक्ष्मीकटाक्षोदितं
हन्त ! स्वानभिमन्यते निरुपमान् किं नश्वरैश्वर्यतः ।
अत्रामुत्र च नित्यभोग्यमतुलं श्रीरम्ययोगीश्वर-
श्रीसत्कृपाह्वयशेवधिं निरवधिं लब्ध्वा सुधन्या वयम् ॥

http://acharya.org

சிலர் லக்ஷ்மீகடாக்ஷத்தாலாகும் சிறிது செல்வத்தைப்பெற்றுத் தங்களை ஒப்பற்றவர்களாக மதிக்கின்றார்கள்; அந்த அழியுஞ் செல்வத்தினால் என்னாகும்? உபய விபூதியிலும் நித்யபோக்யமும் எல்லையற்றதுமான நிதி அடியேனுக்குக் கிடைத்திருக்கின்றது; அந்த நிதிக்கு மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தியென்று பெயர்; அப்படிப்பட்ட நிதியைப் பெற்றுள்ள அடியேனே மிகவும் தன்யன். (௫)

लक्ष्मीशो भगवान् पुरा रघुपतिः कृष्णश्च भूत्वा क्षितौ
विश्वामित्रमुखेषु शिष्य इव सन् वैरस्यमेवावहत् ।
अर्चायामथ सोऽभिराममनघं दिव्यं गुरुं दुस्त्यजं
प्रेप्सुः श्रीवरयोगिनं गुरुपदे विन्यस्य धन्यस्सदा ॥ ६ ॥

எம்பெருமான் முன்பு ராமபிரானும் கண்ணபிரானும் அவதரித்து விச்வாமித்ரர் ஸாந்தீபிநிபோல்வாரிடத்தில் சிஷ்யனாயிருந்து, அவர்கள் ஜிதேந்த்ரியர்களன்றிக்கே நித்யஸம்ஸாரிகளாயிருக்கும் படியைப் பிறகு தெரிந்துகொண்டு அந்தோ! ஆசார்யத்வ பூர்த்தியில்லாத இவர்களையா நாம் ஆசார்யராக வரித்தோமென்று எம்பெருமான் திருவுள்ளம் வெறுப்புற்றேயிருந்தது. அக்குறையை அர்ச்சாவதாரத்தில் தீர்த்துக்கொள்ள விரும்பி ஒருநாளும் விடவொண்ணாத ஆசார்யனைப் பெற விரும்பி ஆசார்யத்வ பூர்த்தியுடைய மணவாளமாமுனிகளை ஆசார்யராக வரித்துக் க்ருதக்ருத்யனாயினன். (௬)

http://acharya.org

एष श्रीवरयोगिराड्विशदवाक्चूडामणित्वप्रथां
धत्ते, सत्यमुपाधिरेष कलयाऽप्यन्योचितो नैव हि ।
निस्सन्देहविपर्ययं सुललितं व्यर्थोक्तिवैदेशिकं
सारस्वादुवचोमयं विवरणं विख्यातमस्यैव हि ॥ ७ ॥

மணவாளமாமுனிகளுக்கு விசதவாக் சிகாமணி யென்கிற விருது ப்ரஸித்தமானது; உண்மையில் இந்த விருது இவரொருவர்க்கே தகுமேயன்றி மற்றொருவர்க்கும் ஏற்காது. ஏனெனில், ஸந்தேஹிக்க இடமில்லாமலும் விபரீதார்த்தங்கொள்ள வொட்டாமலும் வம்புவார்த்தைகளுக்குச் சிறிதும் இடமளிக்காமலும் மிகவும் லலிதமாய் பரமபோக்யமான ஸ்ரீஸூக்திகள் நிரம்பிய வியாக்கியானங்களை அருளிச் செய்தவரென்கிற புகழ் மாமுனிகளுக்கே அஸாதாரணமன்றோ. (எ)

(अथ वा श्लोकान्तरम् ।)

एतत्पथ्यवचो मदीयमनघं कर्णामृतं श्रूयतां
श्रीमत्सुन्दरयोगिनस्सुमधुरा सूक्तिस्सदा सेव्यताम् ।
तत्तादृग्गुणशेवधिर्गुरुवरो यः कोऽपि वा भूतले
भूतः किं भवितेति शुद्धधिषणैस्सद्भिः क्षणं चिन्त्यताम् ॥

எனது செவிக்கினியதோர் செஞ்சொல்லைக் கேண்மின்; மணவாளமாமுனிகளின் மதுரமான ஸ்ரீஸூக்திகளை இடைவிடாது ஸேவித்துப் பாருங்கள்; அவரைப்

http://acharya.org

போன்ற வோராசிரியர் இதுகாறும் இவ்வுலகில் அவதரித்ததுண்டா? இனியாகிலும் அவதரிக்க முடியுமா வென்று சன்மதியுடையீர்! சிறிது சிந்தித்துப்பாருங் கள்.

(அ)

शान्तिर्दान्तिरितीदृशा गुणगणा आवश्यका देहिनाम्
इत्येवं बहवो लिखन्ति कृतिषु स्वीयासु गाम्भीर्यतः ।
तत्तादृग्गुणसंपदां निलयनं को वा गुरुस्स्यादिति
स्वान्ते चिन्तयतां मुनिर्वरवरो नित्यप्रतिष्ठो भवेत् ॥ १ ॥

சமம் தமம் முதலிய ஆத்மகுணங்கள் சேதநர்களுக்கு அவசியம் வேண்டியவையென்றும் அவரவர்கள் தங்கள் நூல்களில் கம்பீரமாக எழுதிவைக்கிறார்கள். ஆனால், அந்தத் திருக்குணங்களுக்குக் கொள்கலமான ஆசிரியர் யாவர்? என்று சிலர் சிந்திக்கப் புகுந்தால் அவர்களின் உள்ளத்தில் மணவாளமாமுனிகளே குடிகொண்டிருக்கக் கூடியவர். மாமுனிகளைப் போன்ற சமதமஸம்பந்நர் வேறொருவருமிலர்.

(க)

अन्तर्वाणिवरानमत्सरधियस्संसेव्य विज्ञापये
प्रेक्षध्वे ननु भूयसीर्गुरुवरैस्तैस्तैः प्रणीताः कृतीः ।
श्रीमद्रम्यवरोपयन्तृमुनिराट्श्रीसूक्तिसौवादवं
किं कस्यापि गुरूत्तमस्य वचसि प्रैक्षि स्फुटं कथ्यताम् ॥

அன்பர்களே! மற்ற வித்வான்களை அடிபணிந்து ஒன்று விண்ணப்பம் செய்கிறேன்; நீங்கள் பலபல ஆசாரியர்கள்

http://acharya.org

இயற்றிய பல நூல்களைப் பார்த்திருக்கிறீர்களே; மண வாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளிலுள்ள இன்சுவை எந்த ஆசிரியருடைய திருவாக்கிலாவது கண்டதுண்டா? உள்ளவாறுரையீர். (௧௦)

दम्भं केवलमेकमेव वचसा स्वीयेन संदर्शय-
न्त्याचार्याः कतिचित् किमस्ति फणितौ तेषाम् ऋते दूषणात् ।
भस्मच्छन्न इवानलो गुरुवरो रम्योपयन्ता मुनिः
स्वादिष्ठैर्वचनैर्विनिन्दनकथावैदेशिकैर्भासते ॥ ११ ॥

சில ஆசாரியர்கள் தங்கள் வாக்கினால் டம்பத்தை மாத்திரமே வெளியிட்டுக் கொள்ளுகிறார்கள். அவர்களு டைய வாக்குக்களில் பெரும்பாலும் பழிக்கைத் தவிர வேறு என்ன காணமுடியும்? நீறுபூத்த நெருப்பு என் னும் படியான மணவாளமாமுனிகள் ஒருவரே பழிக்கு லேசமுமற்ற பரமபோக்ய ஸ்ரீஸூக்திகளை யருளிச்செய்த வர். (௧௧)

अन्तर्मानसमन्यदेव दधते वाच्यन्यदेव ब्रुव-
न्त्यन्ये स्वीयनिबन्धनेषु बहुशो दक्षा अमी वञ्चने ।
तादृग्दुर्गुणगन्धलेशविधुरः कान्तोपयन्ता मुनिः
श्रीरङ्गेशतपःफलं विजयते सद्भक्तचित्ते सदा ॥ १२ ॥

மற்றையோர்கள் நெஞ்சில் ஒன்றை நினைத்துக் கொண்டு வாக்கில் வேறொன்றை வெளியிடுபவர்களாய் நூல்கள் எழுதிப் போருவர்கள்; பெரும்பாலும் அவர்

http://acharya.org

கள் வஞ்சிக்க வல்லவர்கள்; அப்படிப்பட்ட துர்க்குண லேசமும் அற்றவரான மணவாளமாமுனிகள் ஸ்ரீரங்கநாதனுடைய தவப்பயனாகத் தோன்றினவர்; அவர் எப்போதும் பக்தர்களின் உள்ளத்துள்ளார். (கஉ)

यस्सर्वज्ञ इति प्रसिद्धिमगमत् यं रङ्गराडाश्रयत्
 येनारक्ष्यत दर्शनं यतिपतेः यस्मै नतिः श्रेयसी ।
यस्मान्नास्त्यधिको गुरुः भुवि चिरं यस्यैव मन्त्रो जयी
 यस्मिन् सन्ति समे गुणा वरवरं योगीश्वरं तं स्तुमः ॥

(இந்தச்லோகத்தில் எழு வேற்றுமைகளும் வரிசையாக வரும்படி தொடையழகு காண்க.) எவர் ஸர்வஜ்ஞரென்று புகழ்பெற்றாரோ, எவரை ஸ்ரீரங்கநாதன் ஆசார்யராகக் கொண்டானோ, எவரால் ஸ்ரீராமாநுஜ தர்சநம் காக்கப்பட்டதோ, எவர்பொருட்டு நமஸ்காரம் நன்மைபயக்குமோ, எவரைக்காட்டிலும் மேம்பட்ட ஆசாரியர் இல்லையோ, எவருடைய தனியன் இவ்வுலகில் என்றென்றும் வெற்றிபெற்று விளங்குமோ, எவரிடத்தில் ஸகல திருக்குணங்களும் பொருந்தியுள்ளனவோ அந்த மணவாளமாமுனிகளைப் போற்றுகிறோம்.

आकारं वरयोगिनस्सुमधुरं क्षीरोदधेस्सोदरं
 चेतोहारिणमद्वितीयमनघं सेवेत दासः कदा ।
इत्येवं सुचिराद्विचिन्त्य बहुधा दीनं धनार्तं च मां
 हा हा यश्चरितार्थमाशु कृपयाऽकार्षीत्स योगी महान् ॥

http://acharya.org

மணவாளமாமுனிகளின் பாற்கடல் போன்று பரம போக்யமான திருமேனியை அடியேன் எப்போது ஸேவிக்கப்பெறுவேனென்று நெடுநேரமாகக் கண்ணீர் விட்டழுது கைந்துகிடந்தேன்; அங்ஙனே துவண்டு கிடந்த அடியேனுக்கு மாமுனிகள் ஐயோவென்றிரங்கி அருள்செய்த படியை என் சொல்லுவேன்? அவரே மஹான். (க௪)

पथ्यं किंचन वच्मि कर्णकुहरे सानन्दमाकर्ण्यतां
यस्तत्वत्रयटीकया महितया सर्वज्ञभावं निजम् ।
विख्यातं व्यतनोत्तमेनमतुलं कान्तोपयन्त्राह्वयं
योगीन्द्रं सततं निधत्त हृदये नास्त्यन्यतो धन्यता ॥१५॥

காதோடு ஒரு இன்சொல் சொல்லுகேன் கேண்மின்: பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த தத்வத்ரயத்திற்கு மிகச்சிறந்த வியாக்கியானத்தை யருளிச்செய்து தம்முடைய ஸர்வஜ்ஞத்வத்தை விளங்கக் காட்டியருளின மணவாளமாமுனிகளையே அனவரதம் சிந்தை செய்மின்; வேறுவழியால் ஜன்மம் க்ருதார்த்தமாக விரகில்லை. (க௫)

आकाशे यदि विक्षिपन्ति पृथुका जम्बालमेतान्नता
किं बोभोति निरीक्षते किल जनस्सर्वोऽपि चर्यामिमाम् ।
स्यादेवं ननु रम्ययोगिफणितिष्वन्यैरधन्यैर्मुधा
निन्दावाग्विततिर्जडैः प्रलपिता स्वानर्थदा केवलम् ॥ १६ ॥

சிறுவர்கள் (அவிவேகிகள்) சேற்றையெடுத்து ஆகா

http://acharya.org

சத்தில் விட்டெறிந்தால் என்னுடை தென்பதை அனை வரும் காணத் தட்டில்லையே. மணவாளமாமுனிகள் விஷயத்திலும் இந்த நியாயமே காணத்தகும். கருவிலே திருவிலாதார் மாமுனிகளின் அமுதமொழிகளில் தூஷணைகளைப் பிதற்றுவது அவர்களுக்கே அனர்த்தத்தை விளைக்குமதாம். (கஎ)

तं तं देशिकमादरेण महता तुष्टूषतां धीमताम्
आचार्यानपरान्विहाय तमिमं सेवध्वमित्येव गीः ।
प्रादुर्भावमुपैति, नैवमधुना श्रीरम्ययोगीश्वरं
स्तोष्येपोऽहममी करोमि शपथं नान्यो गुरुर्वस्तुतः ॥ १७ ॥

உலகில் புத்திமான்கள் அந்தந்த ஆசாரியரைத் துதிக்கும்போது "மற்ற ஆசாரியர்களை விட்டு இவ்வாசிரியரையே தொழுங்கள்" என்று சொல்லுவதுண்டு; அடியேன் மணவாளமாமுனிகளைத் துதிப்பது அந்த முறைமையில் அல்ல; உண்மையில் மாமுனிகளைத் தவிர வேறு ஆசாரியர் இல்லை யென்று ஆணையிட்டுரைப்பேன்.

रङ्गी यस्य गुणान् स्वयं हि सुचिरं संश्रुत्य शिष्योऽभवत्
तस्मिन् रम्यवरोपयन्तृयमिनि प्रज्ञाविरक्त्यर्णवे ।
आचार्यत्वसमापनं तु समभूदित्येव सर्वे विदुः
तस्मादेव सुधीस्समत्र हि शपे नान्योऽस्त्यतो देशिकः ॥१८॥

ஸ்ரீரங்கநாதன் மாணவராகு மணவாளமாமுனிகளின்

http://acharya.org

திருக்குணங்களை நெடுநாள் ஆராய்ந்து நோக்கி சிஷ்ய ஜனனே அந்த மாமுனிகளுக்குப் பிறகு வேறொரு ஆசாரியர் இருக்கக் கூடாதென்று அவரோடு ஆசார்ய பரம்பரையை ஸமாப்தி செய்துவிட்டான்; (அதாவது) பூருவாசாரியர்கள் என்கிற வியபதேசம் மாமுனிகளோடு முற்றுப்புள்ளி யடைந்திட்டது. இவ்விஷயம் உலகமெல்லாம் அறிந்ததேயாதலால் மாமுனிகளுக்கு மேற்பட்ட ஆசார்யர் இல்லையென்று அடியேன் துணிந்து கூறுகின்றேன். (௧௮)

अत्याश्चर्यमहिष्ठसूक्तिसहितामाचार्यचित्ताह्वयां
लोकाचार्यसहोदरप्रकथितां दिव्यां कृतिं व्याकरोत् ।
विश्वख्यातयशा वरो मुनिवरो व्याख्यामिमां श्रेयसीं
स्वादिष्ठां सततं निषेव्य भजत प्राज्ञाग्रगण्यप्रथाम् ॥ १९ ॥

பின்னை லோகாசார்யரின் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த ஆசார்யஹ்ருதயமென்னும் திவ்யக்ரந்தத்தை உலகம் நிறைந்த புகழாளரான மணவாளமாமுனிகள் வியாக்கியானித்தருளினார்; பரமபோக்யமான அந்த வியாக்கியானத்தை இடைவிடாது ஸேவித்தால் ஸர்வஜ்ஞராகப் பெறலாம். (௧௯)

मन्दानामपि हर्षमप्रतिभटं विश्राणयन्तीर्गिरो
भूयिष्ठा श्रुति केवलं करुणया दत्त्वा समुज्जीवयन् ।

http://acharya.org

आचार्यो वरयोगिराडनुपमो वात्सल्यवारांनिधिः
प्रादाद्यां यतिराजविंशतिमिमां कण्ठे कुरुध्वं सदा ॥

அறிவிலிகளுக்குங்கூட விகாரற்ற ஸம்ப்ரதாயத்தை விளக்கவல்ல பல ஸ்ரீஸூக்திகளைத் தமது நிர்ஹேதுக க்ருபையினாலேயே பணித்து உலகத்தை உய்வித்தருள்பவரான மணவாளமாமுனிகள் திருவாய்மலர்ந்தருளிய யதிராஜவிம்சதியைக் கண்டபாடம் செய்து ஸதா அநுஸந்தியுங்கள். (உ०)

धन्यास्स्याम सदेति ये कुतुकिनस्तैरेतदाकर्ण्यतां
श्रीवाग्भूषणनामकं कृतिवरं लोकार्यसंदर्शितम् ।
श्रीमद्रम्यवरोपयन्तृयमिराड्व्याख्यानरत्नाञ्चितं
शश्वद्देशिकसन्निधौ पठत भो नेतः परा धन्यता ॥ २१ ॥

எப்போதும் நாம் பாக்யசாலிகளாகவே இருக்க வேணுமென்னும் விருப்புடையீர்! கேண்மின்; மணவாளமாமுனிகளருளிச் செய்த வியாக்கியானத்தோடுகூட ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரத்தை ஆசார்ய ஸந்நிதியில் அடிக்கடி ஸேவியுங்கள்; இதுவே பரமபாக்யம்; இதற்கு மேற்பட்ட பாக்யமில்லை. (உக)

ईर्ष्यादुर्गुणदूरगं शमदमोद्यन्वन्तमन्यादृश-
प्रज्ञाशेवधिमप्रमेयविभवं श्रीरम्ययोगीश्वरम् ।
मुक्त्वाऽन्यं गुरुमेकमाश्रयति यस्त्वस्मिंस्तु का नाम भोः
तस्य स्यात् ? परमार्थवेदनकथा न स्याद्धि तस्यायुषि ॥

http://acharya.org

* பிறர்மினுக்கம் பொறாமையிலாப் பெருமைபெற்று சமதமக்கடலாக விளங்குகின்ற மணவாளமாமுனிகளை விட்டு வேறொரு ஆசார்யரை ஆச்ரயிக்கின்றவர்க்கு என்ன த்ருப்தியுண்டாகும்? அன்னவர்க்கு ஆயுள் முழுவதிலும் உண்மைப் பொருள்களை யுணர்வதற்கு ப்ராப்தி யில்லையாகுமன்றோ. (௨௨)

भङ्गो नैव कदाऽपि कुत्रचिदपि श्रीरम्ययोगीशितुः
मन्त्रस्य क्षितिमण्डलेऽत्र भवतीत्येतत्तु तत्त्वं परम् ।
सम्यक् चिन्तयतां विशुद्धमनसां चित्ते न तावद्गुरुः
कोऽप्यन्यो विनिधातुमर्हति पदं पश्यन्तु निर्मत्सराः ॥

மணவாளமாமுனிகளின் தனியனுக்கு இப்பூமண்டலத்தில் ஒரிடத்திலும் ஒருபோதும் பங்கம் விளைவதில்லையென்கிற இந்த தத்துவத்தை நன்கு உணரவல்ல மஹான்களின் மனத்தில் மாமுனிகள் தவிர மற்றொரு ஆசாரியர் அடிவைக்க முடியுமோ? அஸூயை யற்றவர்கள் இதனை ஆராய்ந்து பார்க்க. (௨௩)

अन्याय्यार्थकदम्बकानि बहुशो विक्षिप्य निस्साध्वसं
नास्माभिः क्वचिदप्यपार्थकणिकाऽप्यत्राभ्यधायीति च ।
संलिख्य प्रसभं प्रवञ्च्य यशसा तुङ्गाश्च सन्ति क्षितौ
सन्त्वेते, मुनिरेष एव परमः प्रामाणिकाग्रेसरः ॥ २४ ॥

சிலர் தங்கள் கவடிகளில் தப்பான அர்த்தங்களையே கூசாமல் பெரும்பாலும் எழுதிவைத்து, அவ்வளவோடு

http://acharya.org

தில்லாமல் "இதில் தப்பான அர்த்தம் ஒன்றுகூட இல்லை; எல்லாம் மஹாப்ராமாணிகமான அர்த்தமே எழுதிவைத்தோம்" என்றும் ஊடே ஊடே எழுதி உலகத்தை வஞ்சித்துக் கீர்த்தி பெறுவாருமுளர்; அன்னவர்கள் கிடக்க; மணவாள மாமுனிகளொருவரே ப்ராமாணிகர்களில் தலைவர். (உ௪)

कश्चिन्मामिह वेत्ति तत्त्वत इति श्रीवासुदेवः पुरा
गीतायां ननु गायति स्म तदनु प्रादुर्बभूव क्षितौ ।
श्रीमद्रम्यवरोपयन्तृयमिराडेको गुरुस्तत्त्ववित्
तत्सूक्तिश्रवणा वयं च कतिचित्तत्त्वज्ञभावास्पदम् ॥ २५ ॥

கீதையில் கண்ணபிரான் * கச்சிந்மாம் வேத்தி தத்வத: * என்று அன்றைக்கே சொல்லிவைத்தான்; 'தன்னை உள்ளபடி அறியவல்லவர் யாரோவொருவர்' என்று சொன்ன அந்த கீதையின்படி மணவாளமாமுனிகளொருவரே தத்வஜ்ஞராகத் திருவவதரித்தவர்; அவருடைய ஸ்ரீஸூக்திகளில் ப்ராவண்யமுடையோமுக்கும் தத்வஜ்ஞபாவனை உரியதேயாம். (உ௫)

तर्कव्याकरणादितन्त्रनिचये वैदुष्यमन्यादृशं
स्पष्टीकर्तुमलं यदीयविशदव्याख्यानवैखर्यहो ।
तेनानेन वरोपयन्तृयमिना प्रोक्तां रहस्यत्रय-
व्याख्यां चिन्तय सन्ततं हृदय हे! यद्वैभवं विश्रुतम् ॥

தர்க்கம் வியாகரணம் முதலான ஸகல சாஸ்த்ரங்

http://acharya.org

களிலும் சிறந்த பாண்டித்யத்தை ஸ்பஷ்டமாகக் காட்ட வல்ல வியாக்கியானங்களை யருளிச் செய்தவரான மணவாளமாமுனிகள் திருவாய் மலர்ந்தருளிய நிகரில் புகழ் வாய்ந்த முமுக்ஷுப்படி வியாக்கியானத்தை நெஞ்சே! இடையறாது அநுஸந்திப்பாயாக. (உசு)

यस्य स्वादुवचस्सतिष्वनुपमा प्रामाणिकत्वप्रथा
यस्मिन्नार्जवमद्वितीयमभितं विभ्राजते विश्रुतम् ।
यो लोकार्यगुरूक्तिरक्षणकृते जज्ञे स रम्यो मुनिः
श्रीरङ्गेशमनोहरो विजयते चित्ते ममैवानिशम् ॥ २७ ॥

தம்முடைய பரமமதுரமான ஸ்ரீஸூக்திகளில் தமது பரமப்ராமாணிகத்வத்தை விளங்கவைத்தவரும், குடில புத்தியின்றிக்கே ருஜுபுத்தியாயிருப்பவரும், பிள்ளை லோகாசிரியருடைய ஸ்ரீஸூக்திகளைக் காக்கவே அவதரித்தவரும், ஸ்ரீரங்கநாதனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டவருமான மணவாளமாமுனிகள் எனது உள்ளத்துள்ளே புறைகின்றார். (உஎ)

आदावादिभुजङ्गमोऽथ समभूत्सौमित्रिनामा ततः
श्रीरामानुजयोगिराडभवत्पश्चाद्वरो योगिराट् ।
इत्येवं ह्यवतारतत्त्वमखिलास्सन्तो गृणन्ति स्फुटं
यस्याचार्यमणेः, स एष मुनिराडान्ध्यं ममापाहरत् ॥

முதலில் ஆதிசேஷனாயிருந்து பிறகு இளையபெருமாளாகவும் அதன்பிறகு எம்பெருமானாராகவும் அதற்குப்

http://acharya.org

பிறகு மணவாளமாமுனிகளாகவும் இங்ஙனே அடையவே திருவவதாரமாயிற்றென்று ஸத்துக்கள் உண்மையுணர்ந்து பேசப்பெற்ற மாமுனிகள் அடியேனுடைய அகவிருளைப் போக்கியருளினார். (உஅ)

दक्षास्सन्ति परश्शताः कविवरा द्वित्रक्षणाभ्यन्तरे
निर्मातुं बहुबन्धबन्धभरिता बह्वीः कृतीरस्तु तत् ।
श्रीमत्सुन्दरयोगिदिव्यभणितिष्वेकाक्षरस्याग्रतः
नैव स्थातुमलं समस्तकृतयश्चैता भवन्त्योऽपि ताः ॥ २९ ॥

ஆச்சரியமான பந்தங்களுடன் கூடின பல கவிதைகளைக் கணப்பொழுதில் இயற்றவல்ல கவிச்ரேஷ்டர்கள் பலர் இவ்வுலகிலுள்ளார்; இது கிடக்கட்டும். அவற்றால் என்னபயன்? அவையெல்லாம் ஒன்று கூடினாலும் மணவாளமாமுனிகளின் அமுதமென்மொழிகளில் ஒரு அக்ஷரத்திற்கு இணையாகாவென்பது ஸத்யம். (உகூ)

इत्थं सन्ततमस्मदीयहृदये स्थेयोपयन्ता मुनिः
दुग्धोदध्युपमेयसुन्दरतनुस्वच्छप्रभां भासयन् ।
या स्वप्नेऽपि सुदुर्लभा मम पुनर्जाग्रद्दशायां क्वचित्
प्रादादद्भुतदर्शनं दुरितराश्युन्मूलनं पावनम् ॥ ३० ॥

மணவாளமாமுனிகள் பாற்கடல் போன்ற தமது திருமேனியொளியை என்னெஞ்சினுள்ளே விளங்கக் காட்டியருளா நின்று கொண்டு ஸேவைஸாதிக்கின்றார். கனவிலுங் காண வரிதான அத்திருமேனி விளக்கத்தைப்

http://acharya.org

பாரியேன் தனிற்காணுமாறு அருள்செய்த அதிசயம் என்னே! (௨௰)

गन्तव्यं यदि जातुचिद्दिवमहं तत्रापि रम्योपय-
न्त्राचार्यस्य पदाम्बुजन्मसविधे सर्वास्सपर्याश्चरन् ।
तत्स्वादूक्तिनिषेवणैकरसिको वर्तेय नोचेद्ध्रुवं
भित्त्वा भास्करमण्डलं पुनरपि प्रत्यागतस्स्यां भुवम् ॥ २१ ॥

ஒருகால் அடியேன் பரமபதத்திற்குச் செல்வேனாயின் அங்கும் மணவாளமாமுனிகளின் திருவடி வாரத்திலேயே ஸகல கைங்கரியங்களையும் செய்துகொண்டு அவருடைய மதுர ஸ்ரீஸூக்திகளையே அநுபவித்துக் கொண்டு வாழக்கடவேன்; இல்லையாகில் ஸூர்யமண்டலத்தைப் பிளந்து கொண்டு மீண்டும் இந் நிலவுலகுக்கே வந்து விடுவேனென்பது திண்ணம். (௨௧)

उर्व्यामत्र जनिर्जुगुप्सिततमेत्याहुर्महान्तोऽखिलाः
दासस्यास्य तु चेतसे न खलु सा वाग्रोचते वस्तुतः ।
यस्मादत्र भुवि स्थितोऽप्यहमहो रम्योपयन्तुर्मुनेः
श्रीसूक्त्याह्वयमद्वितीयममृतं चूषन् सदा हर्षभाक् ॥ २२ ॥

இவ்விருள்தருமாஞாலத்தில் பிறப்பு வெறுக்கத்தக்கதென்று பெரியார்கள் கூறுகின்றார்களெனினும் அது அடியேனுக்கு ருசிக்கவில்லை; ஏனெனில், அடியேன் இவ்வுலகில் இருந்துகொண்டும் மணவாள மாமுனிகளின் திவ்யஸூக்தி யமுதத்தையே பருகிக்கொண்டு எப்போ

http://acharya.org

தாம் அனந்தசாயியாகவே யிருக்கிறேனென்றோ! (முன்பரு ண்டாருளன்றோ இவ்வுலகவாழ்க்கை வெறுக்கத்தக்கது.)

(अथ वा श्लोकान्तरम् ।)

उक्तं यच्छठवैरिणा भगवता नश्येत्कलिः पश्यते-
त्याम्नाये स्वसमीक्षिते, यतिपतेर्दृष्ट्या तदित्युच्यते ।
स श्रीमान् यतिराड्वरो मुनिवरो भूत्वा स्वकृत्यं पुनः
निश्शेषं प्रसमाप्य, तां शठजितस्सूक्तिं यथार्थां व्यधात् ॥

நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் "கலியுங் கெடுங் கண்டுகொண்மின்" என்றருளிச்செய்தது எம்பெருமானாரை நோக்கி யென்பர்கள். அவ்வெம்பெருமானார் தாமே மீண்டும் மணவாளமாமுனிகளாகத் திருவவதரித்தருளிக் கலி வித்வம்ஸமாகிற ஸ்வக்ருத்யத்தைக் குறைபறச்செய்து தலைக்கட்டி, அவ்வாழ்வார் ஸ்ரீஸூக்தியை யதார்த்தமாக்கி யருளினார். (௩௩)

णत्वं याति नकार एव सततं षत्वं सकारः क्वचित्
किं भूयःकथनेन ? पाणिनिमुनेस्तन्त्रे बहुर्व्यत्ययः ।
दृश्येत, प्रथितप्रभाववरयोगीन्द्रोक्तिरत्नाकरे
नैव व्यत्ययगन्धलेशकणिकाऽप्यालक्ष्यते लक्ष्यताम् ॥३४॥

பாணினி முனிவின் ஸாஸ்த்ரமான வியாகரணத்தில் விபரீதங்கள் பல காணப்படும். ந-காரம் ண-காரமாய் மாறிவிடும், ஸ-காரம் ஷ-காரமாய் மாறிவிடும். (ப்ர

http://acharya.org

ஜயதி, ப்ரணயதி. வி — ஸைஹநே, விஜ்ருநேத. இத்யாதி
கள் காண்க.) மணவாளமாமுனிகளின் திருவாக்குக்க
ளில் இங்ஙனே ஒரு விபரீதங்கூடக் காணமுடியாது.
எதுவும் யதார்த்தமாகவே யிருக்கும். இது கருத்து. (௩௪)

आवेशं सकलाश्च सूरिगणपाः कासारमुख्यास्तथा
नाथाद्या गुरवश्च सत्यमदधुः श्रीरम्ययोगीश्वरे ।
यद्वा द्राविडसंस्कृतागमततीसौभाग्यसर्वस्वम-
प्येवं कामपि मूर्तिमुद्वहदुदैदित्येव निर्धार्यताम् ॥ ३५ ॥

பொய்கையார் முதலான ஆழ்வார்களனைவரும் ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான ஆசார்யர்களனைவரும் மணவாள மாமுனிகள் பக்கலில் ஆவேசித்தனர் என்னலாம்; அல்லது, வடமொழி தென்மொழி மறைகளின் பாக்ய ஸர்வஸ்வமும் ஒன்றுசேர்ந்து மாமுனிகளாக வடிவு பூண்டு உதித்தது என்று நிச்சயிக்கத் தட்டில்லை. (௩௫)

रङ्गाधीश्वरभाग्यसंततिरहो रम्योपयन्ता यमी-
त्याख्यां लोकविलक्षणां सुमधुरां संगृह्य जज्ञे भुवि ।
इत्येषा प्रतिपत्तिरेव भजति प्रोज्जृम्भते मामके
भूयिष्ठाऽप्युपपत्तिरत्र नियतं सिद्धान्त एषोऽनघः ॥ ३६ ॥

ஸ்ரீரங்கநாதனுடைய பாக்ய பரம்பரையே மணவாள மாமுனியென்கிற திருநாமங் கொண்டு உலகில் அவதரித்தது என்கிற ப்ரதிபத்தியே அடியேனது

http://acharya.org

சத்தில் கொழுந்துவிட்டெரிகின்றது; இவ் விஷயத்தில் அதிகமான உபபத்தி யிருப்பதால் இதுவே திடமான ஸித்தாந்தமாக அடுக்கும். (௨௬)

णत्वं बाधत इत्युदात्त निपुणः कोऽपीति यः पप्रथे
तस्य श्रीमति माधवे हृदयगं वैरं प्रसिद्धं बत ।
तादृक्षं वरयोगिवर्यचरणद्वन्द्वेऽपि ये बिभ्रते
विद्वांसोऽपि भवन्तु ते किमु ततः ? शोच्या हि तेषां गतिः ॥

மஹா பண்டிதரென்று புகழ் பெற்ற அப்பய்யதீக்ஷிதர் நாராயண நாமத்தை ஶிவபரமாக ஸ்தாபிக்கவேணுமென்று சிரமப்பட்டு 'ணத்வம் பாதிக்கிறது' என்று சொல்லிக் கைவொழிந்தார் என்பது ப்ரஸித்தமான விஷயம். அவர்க்கு ஸ்ரீமந் நாராயணனிடத்தில் இருந்த த்வேஷம் உலகமறிந்ததே. அதனால் நாராயணனுக்கு ஒரு குறைவு சேர்ந்ததாகவில்லை. இதுபோலவே, வித்வான்களென்று பேர் படைத்த பிறர்கள் மணவாளமாமுனிகளிடத்தில் மாத்ஸர்யம் கொண்டாலும் அதனால் குறையொன்றுமில்லை; அன்னவர்கள் படும் பாடு சொல்லவேணுமோ? (௨௭)

अल्पीयानहमद्वितीययशसं श्रीरम्ययोगीश्वरं
स्तुत्यं भक्तिधनैः स्तुवन्ननुदिनं जिह्रेमि नैवाल्पशः ।
यस्मादस्य गुरूत्तमस्य सकलं माहात्म्यसारं क्षितौ
अस्यां दासजनोऽयमेव विशदं विज्ञातुमर्होऽभवत् ॥ २८ ॥

http://acharya.org

உலகம் நிறைந்த புகழாளரான மணவாள மாமுனிகளை பக்தியிற் சிறந்த மஹான்கள் துதிக்கவேணுமே யன்றி நீசனேன் நிறைவொன்றுமிலேன் துதிப்பது தகுதியே யன்று; ஆயினும் அடியேன் ஓயாமல் அவரையே துதித்துக்கொண்டிருக்கிறேன்; இதற்காக நான் சிறிதும் வெட்கப்படுகின்றிலேன்; ஏனெனில், மாமுனிகளின் ஸகல வைபவங்களையும் உள்ளபடி உணர இவ்வுலகினுள் அடியேனொருவனே பாக்யம் பெற்றேனன்றோ. (௧அ)

वल्लीतुल्यवलग्नशालिललनाश्लेषादिभोगे सुखं
जागर्तीत्यभिमन्वते जडजनाः क्षुद्रं हि तेषां सुखम् ।
श्रीरङ्गेशगुरूत्तमस्य यमिनः श्रीसूक्तिरत्नाकरे
गाहंगाहमशेषभोगकलितान् हर्षान् भजामो वयम् ॥ १९ ॥

வல்லிசேர் நுண்ணிடை மாதர்களோடு அணைவதனால் இன்பமுள்ளதென்று நீசர்கள் நினைக்கிறார்கள். அவர்களுக்கு இன்பமிருக்கலாம்; ஆனால் அது மிகவும் அற்பமானது; ஸ்ரீரங்கநாதனுக்கு ஆசார்யராக அமைந்த மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி ஸாகரத்தில் ஆழ்ந்து அமிழ்ந்து உலகிலுள்ள ஸகலவித போகங்களாலும் விளையக்கூடிய ஸகலவிதமான இன்பங்களையும் நுகர்வோம் யாம். (௧௯)

अन्यान्येष्वमितेषु लौकिकतया ख्यातेषु कार्योत्करे-
ष्वासक्त्या विगलत्यहो बहुतमः कालो वृथा देहिनाम् ।

http://acharya.org

स्वामिन् सुन्दरयोगिवर्य ! भवतः पादाब्जयोः प्रार्थये
भावत्कोक्तिनिषेवणैकरसिकः कालं नयेयं निजम् ॥ ४० ॥

உலகில் ஒவ்வொருவர்க்கும் லௌகிகமான பலபல காரியங்களிருப்பதால் அவற்றில் போது போக்க நேர்ந்து அதிககாலம் வீணாகவே கழிந்து போகிறது; மணவாள மாமுனிகளே! அடியேனுக்கு அப்படியல்லாமல் தேவரீருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளிலேயே ஸகல காலமும் செல்லும்படி அருள் புரிய வேணுமென்று திருவடி வாரத்தில் வேண்டிக்கொள்கிறேன். (௪0)

मञ्जीराञ्चितपादयुग्मवनितासंचारकालोदित-
ध्वन्याकर्णनविह्वलाः कतिपये मुह्यन्ति, मुह्यन्तु ते ।
व्यामोहो मम तु प्रसिद्ध्यतितमां श्रीरम्ययोगीशितुः
मन्त्रोद्घोषणकालिकध्वनिविशेषाकर्णनोज्जृम्भितः ॥ ४१ ॥

மாதர்கள் பாதச்சிலம்பு அணிந்துகொண்டு நடந்து செல்லுமளவில் அச்சிலம்பொலி கேட்டு மயங்கிப்போவாருமுளர்; அது கிடக்க: மணவாளமாமுனிகளின் தனியனை கோஷ்டிகளில் உரக்க அநுஸந்திக்கும்போது உண்டாகும் த்வனி விசேஷத்தைக் கேட்குமளவிலே அடியேன் வ்யாமோஹித்திருக்குமது ஸ்வாபாவிகம்.

தனியனின் பூர்வார்த்தம் முற்றிற்று.

http://acharya.org

உத்தரார்த்தம்.

यस्य स्यादिह मानसे सुकृतिनः पुंसस्सदा पावनं
श्रीमत्कान्तवरोपयन्तृयमिराण्मूर्तेश्शुभं चिन्तनम् ।
तस्य स्यादनघा मतिर्यतिपतेस्सद्दर्शने निस्तुला
किं भूयःकथनेन ? तत्त्वमखिलं ज्ञातुं स एवार्हति ॥ ४२ ॥

மணவாளமாமுனிகளின் பரமபவித்திரமான திருக்கோலத்தைச் சிந்தை செய்யும் பாக்கியமுடையார்க்கு எம்பெருமானார் தரிசனத்தில் நல்ல உணர்ச்சி விளையும். ஸகல தத்துவங்களையும் உள்ளபடி புணரவல்ல யோக்யதை அவர்கட்கே உரியதாகும். (சஉ)

(अथ वा श्लोकान्तरम् ।)

यद्यप्यत्र शठारिनाथमुनिराट्श्रीयामुनश्रीयति-
क्ष्माभृद्भट्टपराशरादिगुरवोऽप्यत्यन्तभक्त्यास्पदम् ।
जाग्रत्येव, तथाऽपि मे विशदवाक्चूडामणौ सुन्दरे
योगीन्द्रे तु विलक्षणा नवनवा भक्तिस्समुज्जृम्भते ॥ ४३ ॥

இவ்வுலகில் நம்மாழ்வார் நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் பட்டர் முதலான ஆசாரியர்களும் நம்முடைய பக்திக்குப் பாத்திரமாகக் கூடியவர்களாக விளங்குகின்றார்களெனினும், அடியேனுக்கு விசதவாக் சிகாமணியான மணவாள மாமுனிகளிடத்தில் மாத்திரமே விலக்ஷணமாய் நவம் நவமான பக்தி துளிர்க்கின்றது. (சங)

http://acharya.org

अध्वानं वरयोगिना सुमनसा संदर्शितं भेजुषां
तत्त्वार्थेषु विशुद्धधीविलसितं विद्योतते विश्रुतम् ।
तस्मिन्नध्वनि पावने विमुखतां ये बिभ्रति क्षुल्लकाः
तेषां शोच्यदशां कथं नु कथये धिग्जन्म तेषामिह ॥ ४४ ॥

மணவாளமாமுனிகள் காட்டியருளின பத்ததியைப் பற்றினவர்களுக்குத் தத்வார்த்தங்களில் தூய நன்மதி விளங்குவது ப்ரஸித்தம்; தௌர்ப்பாக்ய வசத்தாலே அந்த நல்வழியில் விமுகராயிருக்குமவர்கள் படும் பாட்டை என் சொல்வேன்? அன்னவர்களின் பிறவியே வெறுக்கத்தக்கது. (௪௪)

तन्यान्निस्तुलवैभवो वरमुनिः प्रेमात्मिकां शेमुषीम्
आत्मीयालयदिव्यसूक्तिविमुखेष्वप्यजस्रेत्यर्थये ।
नैवं चेदहह ! प्रकाममुदियात् श्रीवैष्णवानां सतां
तेषां दुर्गतिसंततिः, कथमिदं सह्यं भवेन्मादृशाम् ॥ ४५ ॥

மணவாளமாமுனிகள் தம்முடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளில் விமுகராயிருப்பார்கட்கும் அன்பு உண்டாகும்படி கடாக்ஷித்தருளவேணுமென்று அடியேன் வேண்டிக் கொள்ளுகிறேன். ஏனெனில், ஸ்ரீவைஷ்ணவர்களாகப் பிறந்து மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளில் மாத்ஸரியங் கொண்டிருந்தால் அவர்களுக்கு இடையறாத துர்க்கதிகளன்றோ நேரும். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு துர்க்கதி

http://acharya.org

சேருவதென்றால் இந்த துக்கம் ஸஹிக்கக் கூடியதன்றோ. ஆகவே, தியவர்களையும் நல்லவர்களாக்கியருள்க. (௪௫)

ईषद्भक्तिरलं तरां वरमुनेः श्रीपादपङ्केरुहे
तावत्या परमार्थतत्त्वमखिलं निस्संशयं भास्यति ।
एवं दुष्फलतोऽप्यलं निपतनायोच्चावचे नारके
हाहा! तत्त्वमिदं विदन्नपि जनो भूयान् विनाशोन्मुखः ॥

மணவாளமாமுனிகளின் திருவடிகளில் ஸ்வல்ப பக்தி யிருந்தாலும், பரமார்த்தங்களை உள்ளபடி உணர்வதற்கு அவ்வளவே போதுமானது. இங்ஙனமே மாமுனிகள் திறத்தில் சிறிது மாச்சரியமுண்டானாலும் பல கொடிய நரகங்களில் வீழ்ந்துழல்வதற்கு அவ்வளவே போதும். அந்தோ! இவ்வுண்மையை அறிந்து வைத்தும் கெட்டுப்போக நினைப்பார் பலருளரே! (௪௬)

नत्वा श्रीवरयोगिपादकमलं मूर्धाऽश्नुते धन्यतां
स्तुत्वा तस्य मुनेर्गुणान् शुभतमान् जिह्वा कृतार्था परम् ।
स्मृत्वा तस्य वचांसि पावनतमं शोभेति मे मानसं
पाणिस्तस्य यशो विलिख्य विपुलं कार्तार्थ्यमासेवते ॥४७॥

அடியேனுடைய தலை மணவாளமாமுனிகளின் திருவடிகளைத் தொழுது தன்யமாகின்றது. வாக்கு அவருடைய திருக்குணங்களைத் துதித்து க்ருதார்த்தமாகின்றது. உள்ளம் அவருடைய ஸ்ரீஸூக்திகளைச் சிந்தை

http://acharya.org

செய்து பவித்திரமாகின்றது. கை அவருடைய பரந்த புகழை யெழுதி ஸத்தை பெறுகின்றது. (௪௭)

दत्ते रम्यवरोपयन्तृयमिनः श्रीसूक्तिरत्नाकरः
भक्तानां श्रियमुत्तमां गुणमणीन् स्वादूपदेशोर्मिकाः ।
नित्यं शुद्धयशोमयं शशधरं ज्ञानाख्यकल्पद्रुमं
त्रय्यन्तार्थमयीं सुधां परमतध्वंसोक्तिहालाहलम् ॥ ४८ ॥

மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி உண்மையில் கடலென்னத்தகும். கடல் செய்வதெல்லாம் செய்கின்றது இதுவும். கடல் ஸ்ரீயைத் தந்தது. இத்தக்கடல் பக்தர்களுக்குச் சிறந்த செல்வத்தைத் தந்திடுகின்றது. கடல் ரத்னங்களைத் தருகின்றது; இக்கடல் ஸத்குணங்களாகிற ரத்னங்களைத் தருகின்றது. (மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளைப் பயில்பவர்கட்கு ஸத்குணங்கள் விளையு மென்கை.) கடல் அலைகளைத் தரும். இக்கடல் மதுரோபதேச தரங்கங்களைத் தரும். கடல் சந்திரனைத் தந்தது; இக்கடல் நல்ல கீர்த்தியாகிற சந்திரனைத் தருகின்றது. (மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளைப் பயில்பவர்கட்கு நல்ல புகழுண்டாமென்கை.) அக்கடல் கல்ப வ்ருக்ஷத்தைப் பயந்தது. இக்கடல் ஞானமாகிற கற்பகத்தருவைத் தரும். அக்கடல் அமுதமளித்தது. இக்கடல் வேதாந்த விழுப்பொருளாகிற அமுதமளிக்கவல்லது. அக்கடல் ஹாலாஹல மென்னும் நஞ்சை நல்கிற்று; இக்கடல் (தத்வத்ரய வ்யாக்யானாதிகளில்) பரமதத்வம்ஸக ஸ்ரீஸூக்தியாகிற ஹாலாஹலத்தைத் தரும். ஆகவே கடலென்னப் பொருந்தும். (பரமதத்வம்ஸக ஸ்ரீஸூக்தி

http://acharya.org

களும் தொண்டர்க்கு அமுதமேயானாலும் பிறருடைய திருஷ்டியாலே ஹாலாஹலமென்றது.) (௨௮)

रक्षायां निपुणो रमापतिरिति ख्यातिर्बुधैर्योदिता
सत्यं रक्षति संततं वरमुनिः कान्तोपयन्तैव नः ।
इष्टप्राप्तिमनिष्टभङ्गमपि यत्सूक्त्या वयं प्राप्नुमः
श्रीमानेष मुनीश्वरो हि भविनामैकान्त्यतो रक्षकः ॥ २९ ॥

ரக்ஷிக்க வல்லவன் லக்ஷ்மீபதி என்றொரு ப்ரஸித்தி வீணாகவே உலகிற் பரவியது. உண்மையில் மணவாள மாமுனிகளே நம்மை ரக்ஷிப்பவராவர். இஷ்டப்ராப்தி யையும் அநிஷ்ட நிவாரணத்தையும் செய்பவரே ரக்ஷக ராதலால் மாமுனிகள் தாமே தமது ஸ்ரீஸூக்திகளால் அவ்விரண்டையும் செய்துகொண்டு ஸம்ஸாரிகளை நன்கு ரக்ஷித்தருளாநின்றார். (௨௯.)

अन्धानां रविरश्मिभिर्न फलमित्येतावता भास्करे
को दोषो लभतेऽवकाशम् अहह ! न्यायोऽयमत्राक्षतः ।
दौर्भाग्याद्धतचेतसां वरमुनेः श्रीसूक्तिभिः किंचिद-
प्यासीन्नो फलमित्यतः किमु हृतं ? धन्यान् सतः पश्यत ॥

குருடர்களுக்கு ஸூர்ய கிரணங்களால் ஒரு பலனு மில்லை யென்பதால் ஸூர்யனுக்கு ஏதேனும் குற்ற முண்டோ? அதுபோல கருவிலே திருவிலாதார் சிலர் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளால் பயன் பெற்

http://acharya.org

நீலமென்றால் அதனால் என்ன சேதம்? பயன் பெற்று வாழ்கிற புனிதர்களைக் கண்டு தெளிக. (௫0)

पर्जन्यो जलराशितः कटु जलं पीत्वा यथा वर्षति
स्वादिष्ठं ननु तद्वदेव भगवान् सौम्योपयन्ता मुनिः ।
शास्त्राब्धेरमितान् प्रगृह्य विषयान् सौस्वाद्येन स्वयं
वर्षन् साधु निपाययत्यनवधीन् सौभाग्यसीम्नि स्थितान् ॥

மேகமானது கடல் நீரைப்பருகிப் பரமமதுரமாக வர்ஷிப்பதுபோல மணவாள மாமுனிகளும் சாஸ்த்ரக் கடலில் நின்றும் அளவற்ற விஷயங்களை முகர்ந்துகொண்டு அதிமதுரமாக வர்ஷித்து பாக்யசாலிகள் பலரும் பருகிக் களிக்குமாறு செய்தருளாநின்றார். (௫௧)

रक्षापेक्षणमात्रकांक्षिणि हरौ नस्साधनानुष्ठितिः
नौचित्यं वहतीति लोकगुरुराट्सूक्तिं समुल्लासयन् ।
श्रीमत्कान्तवरोपयन्तृयमिनः श्रीसूक्तिरत्नोत्करः
श्रीरामानुजसंप्रदायसरणौरुच्चैः प्रदीपायते ॥ ५२ ॥

* सर्वज्ञोऽपि हि विश्वेशस्सदा कारुणिकोऽपि सन् । संसारतन्त्र-वाहित्वाद्रक्ष्यापेक्षां प्रतीक्षते * என்கிறபடியே ரக்ஷாபேக்ஷா நிரீக்ஷித்திருக்கவே எம்பெருமான் எதிர் பார்த்திருந்தலால் தாம் பக்கலொரு ஸாதனாநுஷ்டானம் பண்ண வேண்டாதென்று பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்ததத்தை நன்கு விளக்குகின்ற மணவாள மாமுனிகளின்

http://acharya.org

ஸ்ரீ[illegible]க்கிரந்தம் எம்பெருமானார் தரிசனத்திற்கு உயர்ந்த மணிவிளக்காகவுள்ளது. (௫௦)

अन्तर्ध्वान्तमपासितुं क्षितितले ज्ञानप्रदीपादृते
नान्यत्किञ्चन साधनं लसति तं दीपं वरो योगिराट् ।
एकाकी स्वयमप्रमेयकृपया प्रादात्तथाऽप्यञ्जसा
तस्मिन् हा ! शलभीभवन्ति चपलाः किं ब्रूमहे तद्गतिम् ॥

அகவிருளை யகற்றுவதற்கு உலகில் ஞானவிளக்கு தவிர வேறொரு கருவி கிடையாதென்பது நிர்விவாதம். அப்படிப்பட்ட அணிவிளக்கை இன்னருளால் ஏற்றி வைத்தவர் மணவாள மாமுனிகள் ஒருவரேயாவர்; ஆயினும் அந்தோ! அவ்விளக்கில் சலபமாகி யொழிவாரும் சிலருளரே! அன்னவர்கட்கு நேரப்போகும் துர்க்கதியை என் சொல்வோம்! (௫௧)

वन्दे सुन्दरयोगिवर्यचरणद्वन्द्वं समस्तार्थदं
ये केचिद्बहुलान्निबन्धनिवहान् क्षुद्रभ्रमोत्पादकान् ।
निर्माय प्रतिवञ्चयन्ति भुवनं तेषां वचोराशिभिः
दासस्यास्य मनः कदाऽपि विकृतिं मा नाम विन्दत्विति ॥

க்ஷுத்ர ஜனங்களுக்கு வியாமோஹத்தை விளைக்க வல்ல பலபல சுவடிகளை யெழுதி வைத்து உலகை வஞ்சிப்பார் பலருளர்; அன்னவர்களுடைய உக்திராசிகளால் அடியேனுடைய மனம் ஒருபோதும் விகாரமடையா

http://acharya.org

திருக்க வேணுமென்று மணவாள மாமுனிகளின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன். (௫௪.)

अब्धिर्लङ्घित एव वानरभटैरित्युक्तरीत्या भुवि
प्रायस्सन्ति महाबुधा अपि न ते सारं तु सारस्वतम् ।
जानन्ति, प्रकटं ब्रवीमि सकलं शास्त्रार्थसारं विदन्
एकाकी जयति क्षितौ वरवरो योगीश्वरो नेतरः ॥ ५५ ॥

அப்திர் லங்கித ஏவ வாநர படை: என்று முராரி கவி பணித்தபடியே கடலைக்கடந்த வானர முதலிகளுக்குக் கடலின் ஆழம் தெரியாதாப் போலே, உலகில் பண்டிதரென்று பேர்படைத்தவர்களெல்லாரும் மேலெழுந்தவாரியாக அறிந்தவர்களேயன்றி சாஸ்த்ரார்த்த ஸாரங்களை உட்புகுந்து அறிந்தாரிலர்; மணவாள மாமுனிகளொருவரே ஆழ்ந்த அறிவாளரென்று திண்ணமாகச் சொல்லுவேன். (௫௫)

पक्ष—स्वक्ष—गतौ ग्रह-प्लवगतौ शुष्क-प्रसूतौ श्रिता-
वर्णौ पक्षपरिग्रहे पठित-मलाविल्यादिधातून् सदा ।
जल्पंजल्पमशेषमायुरखिलं व्यर्थं क्षिपन्तो जडाः
श्रीसूक्तीर्न विदन्ति कान्तयमिनो वैकुण्ठवैदेशिकाः ॥ ५६ ॥

“[illegible]—கதௌ” “சச—ப்லுதகதௌ” என்றிப்படி தாது பாடங்களை யுருப்போட்டுக் கொண்டே வாழ்நாளை யெல்லாம் வீணாகக் கழிக்கின்ற ஜடர்கள் அந்தோ! மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்

http://acharya.org

திகளை அறியப் பெற்றிலரே! நல்ல கதிக்கு வழி தேடு கின்றிலரே. (௫௬)

अन्तस्सर्वपदार्थसन्ततिषु च व्याप्तस्य विष्णोर्हरेः
पूर्तिर्नाम समाप्यवृत्तिरिति नेत्यन्याप्यवादोत्सुकान् ।
लक्ष्मीनाथविचित्रशक्त्यसहनान् स्वोक्त्या विधून्वन्मुनिः
श्रीमत्कान्तवरोपयन्तृगुरुराडेकस्सतामग्रणीः ॥ ५७ ॥

ஸகல பதார்த்தங்களிலும் உள்ளும் புறம்புமொக்க வியாபித்திருக்கின்ற எம்பெருமானுடைய வ்யாப்தியாவது வஸ்துதோறும் பரிஸமாப்ய வர்த்தமாநத்வமன்று என்று வாதிப்பவர்களும் பகவானுடைய விசித்திர சக்தியை ஸஹியாதவர்களுமான பிறரைத் தமது ஸ்ரீஸூக்தியால் உதறித் தள்ளுகின்ற மணவாள மாமுனிகளே ஸத்துக்களில் தலைவர். (௫௭)

मन्यन्ते वरयोगिनं यतिपतेरेवावतारं परं
व्याख्यारूपकृतीविशेषत इह प्रायच्छतां द्वावपि ।
व्यर्थां दूषणहास्यवाचमपि नो विन्यस्यतः सर्वथा
द्वावेतावविभिन्नशीलसुभगावित्येव निश्चप्रचम् ॥ ५८ ॥

மணவாள மாமுனிகள் உடையவருடைய அபராவதாரமேயாவர். பெரும்பாலும் வியாக்யான ரூபங்களான க்ரந்தங்களையே அருளிச் செய்வதும், வீண் தூஷண பரிஹாஸ வாக்குகளைப் பொழியாமலிருப்பதுமான தன்மைகள் இவ்விரண்டு ஆசார்யர்கள்பக்கலிலுமென்று

http://acharya.org

பொருந்தி யிருத்தல் கொண்டு இதை நிச்சயிக்கலாம்.

वर्धिष्णून् प्रति बोधयेयमधुना चित्तभ्रमोत्पादने-
ष्वन्यान्येषु निबन्धराशिषु वृथा कालक्षयो नोचितः ।
द्राक्षापाकनिदर्शनानि ललितान्याश्चर्यवाग्गुम्भना-
न्याचार्यस्य वरोपयन्तृयमिनः सेव्यान्येकान्ततः ॥ ५९ ॥

மென்மேலும் ஞானவிளக்கம் பெறவேணுமென் றிருப்பார்க்கு ஒன்று சொல்லுகேன். சித்தப்ரமத்தை விளைக்கவல்ல பல்வேறு புத்தகங்களில் வீணாகப் போதைப் போக்குவது தகுதியற்றது; த்ராக்ஷாபாகத் திற்கு நிதர்சனமாக அமைந்த மணவாள மாமுனிகளின் அத்புத லலித திவ்ய ஸூக்திகளையே இடைவீடின்றி அநுபவியுங்கள். (௫௯)

अन्तस्सन्ततमेक एव भगवान् कान्तोपयन्ता मुनिः
कान्तं मङ्गलविग्रहं विशदयन् प्रीणाति मे मानसम् ।
नैवान्यस्य गुरोर्हरेरपि च वाऽस्मास्तेऽवकाशो ध्रुवं
धन्योऽहं न समोऽस्ति मे न च समो नान्यस्समो भूतले ॥

என்னுள்ளத்துள்ளே மணவாள மாமுனிகளொருவர் தாமே தமது திருமேனி யொளியை விளங்கச் செய்தருளா நின்றுள்ளார்; வேறு ஆசிரியர்க்காவது எம்பெருமானுக்காவது இனி என்னெஞ்சில் இடம் கிடைப்பரிது; இல்லையெனக்கெதிரில்லை யெனக்கெதிரில்லை யெனக்கெதிரே. (௬௦)

नक्षत्रेशसमानमाननमथ ज्योत्स्नासदृक्षं स्मितं
कर्णान्तोल्लसिते दृशौ वकुलभृत्सूक्त्युज्ज्वलं चाधरम् ।
पीतोदारविशुद्धपुण्ड्रसुभगं गात्रं च योगीन्द्र! ते
ये प्रेक्षन्त समक्षतो भुवममी धन्यास्सुधन्या नराः ॥ ६१ ॥

மணவாள மாமுனிகாள்! தேவரீருடைய திங்கள் போன்ற திருமுக மண்டலத்தையும் நிலாப்போன்ற புன்முறுவலையும் செவியளவும் நீண்ட திருக்கண்களையும் திருவாய்மொழியின் மணம் கமழும் திருவதரத்தையும் திவ்யோர்த்வ புண்ட்ர ஸுபகமான திருமேனியையும் நேரில் ஸேவிக்கப் பெற்றவர்களே பாக்யசாலிகள். (௬௧)

दत्ते निश्चलभक्तिमात्मपदयोर्धत्ते विरक्तिं मुनिः
चित्ते सन्ततसन्निधानकरणाद्वित्तैषणां लुम्पति ।
वित्तेशादिपदान्यवाप्तुमपि भो हृत्ते रुचिर्मास्म भूत्
धिक्ते दुर्विषयेषु धावनरुचिं मत्तेभवन्माचर ॥ ६२ ॥

மணவாள மாமுனிகள் என்னுள்ளத்துள் எப்போது மெழுந்தருளியிருந்து தமது திருவடிகளில் ஸ்திரமான பக்தியை யளிக்கின்றார்; விரக்தியை விளைக்கின்றார்; பொருளாசையைப் போக்குகின்றார்; ஓ மனமே! குபேராதி பதவிகளைப் பெறுதற்கும் நீ ஆசைகொள்ளாதே; விஷயாந்தரங்களில் ஓட நினைப்பதும் வேண்டா; மதயானைபோல் கண்டவிடமும் திரியாதே; மாமுனிகளிடத்தே ஊன்றியிரு. (௬௨)

http://acharya.org

एरण्डोऽपि श्रुति द्रुमायत इति न्यायेन यः कश्चिद-
प्यार्यो विन्दति तत्रतत्र सहसैवाचार्यपीठाञ्चनम् ।
आचार्यत्वमिहैव शक्तिमनघां प्राप्नोति निस्संशयं
श्रीमत्सुन्दरयोगिनीत्यधिघटे हस्तं प्रसार्य ब्रवे ॥ ६३ ॥

* நிரஸ்தபாதபே தேசே ஏரண்டோபி த்ருமாயதே * [மரமில்லாதவூரில் ஆமணக்குஞ் செடியும் மரமாம்] என்றாப்போலே ஆங்காங்குப் பலரும் ஆசார்ய பீடத்தில் அமர்ந்து ஆசார்ய விருது வஹித்து விடலாம்; உண்மையில் மணவாள மாமுனிகளொருவர் பக்கலிலேயே ஆசார்யத்வ பூர்த்தியுள்ளதென்று குடப்பாம்பில் கையிட்டுரைப்பேன். (௬௩)

रक्षिष्यत्यवलीलया हरिरिति भ्रान्तास्तमेव स्तुव-
न्त्याचार्यान्वयसन्तरा स भगवान् नो रक्षितुं शक्नुयात् ।
आचार्यत्वमिहैव सुन्दरमुनौ पूर्णं ततोऽस्यान्वयं
दृष्ट्वैवाच्युत एष रक्षितुमलं तस्मान्मुनीन्द्रो गतिः ॥ ६४ ॥

உலகில் பலரும் எம்பெருமானையே ரக்ஷகனாக நம்பி அவனையே துதிக்கின்றனர். அந்த பகவான் தானும் ஆசார்ய ஸம்பந்தமில்லாதாரைக் கடாக்ஷிக்க வல்லவனல்லன்; மணவாள மாமுனிகளிடத்திலேயே ஆசார்யத்வம் புஷ்கலமாதலால் இவருடைய ஸம்பந்தத்தை நோக்கியே அவன் ரக்ஷிக்கவல்லவன்; ஆதலால் மாமுனிகளே முமுக்ஷுக்களுக்குத் தஞ்சம். (௬௪)

http://acharya.org

अज्ञानामविवेकशून्यमनसामुद्धारणैकेच्छया
लोकाचार्यकृताः कृतीरतिनिगूढार्थाः मुनीन्द्रो वरः ।
व्याख्यास्यद्यदि नैव दिव्यकृपया कृत्स्नं जगद्दुस्तरे
संसारे ह्यपतिष्यदस्य हि गुरोर्वाचामभूमिः कृपा ॥ ६५ ॥

நல்வழி தீவழி தெரியாது திகைக்கின்றவர்களுக்குக் கைகொடுக்கவே பிள்ளை லோகாசாரியர் அருளிச்செய்த ரஹஸ்யார்த்த க்ரந்தங்களை மணவாள மாமுனிகள் பரம கிருபையோடு வியாக்யானித் தருளாதிருந்தால், அந்தோ! உலகம் முழுவதும் ஸம்ஸார ஸாகரத்தில் அழுந்தித் திவளுமே; மாமுனிகளின் பேரருள் பேச்சுக்கு நிலமோ? (௬௫)

मग्नानां भवसागरे तरणिवद्विभ्राजते यत्पदं
दष्टानां विषयाहिभिर्विहगराण्मन्त्रायते यस्य गीः ।
दग्धानां दुरितौघदावदहनैः धाराधरौघायते
यन्मूर्तिच्छविचिन्तनं स जयतात् कान्तोपयन्ता मुनिः ॥ ६६ ॥

மணவாள மாமுனிகளின் திருவடிகள் பிறவிக்கடலின் அழுந்தினார்க்கு நாவாய் போலும்; அவருடைய திருவாக்குகள் விஷய விஷதரங்களாலே கடியுண்டார்க்கு கருட மந்த்ரம் போலும்; அவருடைய திருமேனி விளக்கத்தைச் சிந்தை செய்வது பாவங்களாகிற காட்டுத் தீயில் வேகின்றவர்களுக்கு வர்ஷதாரை போலும்; அன்னார் வாழ்க. (௬௬)

http://acharya.org

यत्नोऽवश्यविधेय एव मनुजैश्चैतन्यकार्यात्मकः
नो चेन्मुक्तिकथैव नेति वदतां स्वान्तस्थितध्वान्तहृत् ।
यस्य श्रीवरयोगिनः सुमहिता सूक्तिः प्रपन्नौषधं
सोऽयं मामिह वीक्षते स कृपया स्यादेष इत्यादरात् ॥६७॥

'சைதந்ய கார்யமான ஸாதநாநுஷ்டானங்களை அவசியம் பண்ணியே தீரவேண்டும்; இல்லையானல் முக்திபெற வழியில்லை' என்பாருடைய அகவிருளைப் போக்குமதாய் ப்ரபந்நர்களுக்கு அருமருந்தான ஸ்ரீஸூக்திகளைப் பணித்தருளின மணவாள மாமுனிகள் அடியேனை * ஆமுதல்வனிவனென்று கடாக்ஷித்தருளினார்.

अह्नायाश्रयत प्रहर्षविवशाः कान्तोपयन्तुर्मुनेः
पादाब्जे अथ तस्य दिव्यफणितिष्वार्तिप्रबन्धं सदा ।
उच्चैर्घुष्यत सर्वमार्तिनिवहं सद्यो हृतं पश्यत
श्रेयांसि स्वयमागतानि नियतं संप्राप्य संतुष्यत ॥ ६८ ॥

மணவாள மாமுனிகளின் திருவடித் தாமரைகளை உகந்து விரைந்து பணிமின்; பின்னை அவருடைய திவ்ய ஸூக்திகளுள் ஆர்த்திப் பிரபந்தத்தை உரக்க அநுஸந்தித்து எல்லா ஆர்த்திகளையும் உடனே தொலையப் பெறுங்கள்; ஸகல ச்ரேயஸ்ஸுகளும் தன்னடையே வந்து சேரும்படி கண்டு மகிழுங்கள். (௬௮)

http://acharya.org

जन्मान्यत्र महीतले मम मुहुर्भूयासुरित्यर्थये
  यद्येवं वरयोगिवर्यचरितरसिकः स्यां सर्वजन्मस्वपि ।
तत्पाते नित्यविभूतिनाम्नि निलये वासस्पृहा नास्ति मे
  सत्यं वच्मि मुनीन्द्र सुन्दरगुरो पूर्णं कटाक्षं कुरु ॥ ६९ ॥

அடியேன் இப்போது போலவே எப்போதும் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளையே சுவைத்திருப்பேனாயின் அடியேன் மீண்டு மீண்டும் இவ்வுலகிலே பிறக்கப் பெறுவேனாக; பிறவிதோறும் இப் பெரும் பாக்கியம் வாய்க்குமாகில் பரமபதத்திலும் வாஞ்சையுடையேனல்லேன்; மாமுனிகளே! இதுவே உண்மையுரை; பூர்ணமாகக் கடாக்ஷித்தருளவேணும். (௬௯)

आचारानभिरामयोगिमणिना संरक्षितान् पावनान्
  धन्याः श्रद्दधते तदन्यजनतास्सीदन्त्यनर्थ्ये पथि ।
शुद्धायामिह संप्रदायसरणौ सौभाग्यभूम्ना जनिः
  संपन्नेति सदा ममैव हृदयं हर्षप्रकर्षोज्ज्वलम् ॥ ७० ॥

மணவாள மாமுனிகள் காத்தருளின ஸதநுஷ்டானங்களில் பாக்யசாலிகள் ஊன்றிப் போருவர்கள்; அங்ஙனல்லாத மற்றையோர் தீயவழிகளில் அலமந்துறுவர்கள். பரமபவித்திரமான இந்த ஸம்ப்ரதாய ஸரணியில் பரமபாக்யவசத்தினால் பிறக்கப் பெற்றோமே யென்கிற களிப்பு அடியேனுக்கே உள்ளதொன்று. (௭௦)

http://acharya.org

मन्त्रास्सन्ति हि भूरिशो भगवतः किं तेष्वभूद्गौरवं
कस्तान् चिन्तयतीह कस्य हृदयं श्रद्धाजडं तेष्वहो ।
श्रीरङ्गेन्दुमुखारविन्दमधुनः श्रीशैलमन्त्रोत्तम-
स्योत्कर्षो हि विसृत्वरो विजयते योगीन्द्र भोस्सुन्दर ! ॥

மணவாள மாமுனிகளே! உலகில் பலபல பகவந் மந்த்ரங்கள் உள்ளன; அவற்றிற்கு என்ன பெருமை ஏற்பட்டது? அவற்றைச் சிந்திப்பவரார்? அவற்றில் யாருடைய உள்ளம் ஊன்றியிருக்கிறது? ஸ்ரீரங்கநாதனுடைய முகாரவிந்தத்தில் தோன்றின மதுவென்னலான (தேவரீர் விஷயமான) ஸ்ரீசைலேச மந்திரத்தின் பெருமையேயன்றோ உலக முழுவது மோங்கி நிற்கின்றது. (எக)

आचार्यप्रवरे वरे मुनिवरे यद्यप्यनन्याश्रयाः
सर्वास्संपद उल्लसन्ति च तथाऽप्येका परं न्यूनता ।
श्रीशैलेशदयेति विश्वविदितं सर्वोत्तमं पावनं
मन्त्रं चिन्तयितुं यदेष मुनिराड् भाग्यं न लेभे भुवि ॥७२॥

மணவாள மாமுனிகளிடத்தில் எல்லாப் பெருமைகளும் விளங்குகின்றனவாம். ஒரு குறை மாத்திரம் உள்ளதேயாம்; அது என்னெனில்; மிகச்சிறந்த பரமபாவனமாய் விளங்கும் ஸ்ரீசைலேச மந்திரத்தைச் சிந்தை செய்யும் பாக்கியம் அவர்க்கு இல்லையாயிற்றே. (எஉ)

http://acharya.org

सत्यं किञ्चन वच्मि सुन्दरमुने दिव्योत्सवस्तावकः
श्रीकाञ्चीप्रभृतिस्थलेषु भगवन् संपद्यते भूरिशः ।
तत्तादृक्समयेषु यादृशमहं हर्षं समासादये
सोऽयं नैव किलान्वभावि भवता त्वत्तोऽपि धन्योऽस्म्यहम् ॥

மணவாள மாமுனிகளே! ஒரு உண்மை கேளீர்: தேவரீருடைய மஹோத்ஸவம் கச்சிநகர் முதலான பல தலங்களில் பெருக்க நடக்கிறதன்றோ. அந்த ஸமயங்களில் அடியேன் அநுபவிக்கும் ஆநந்தாதிசயத்தை தேவரீர் விபவத்தில் அநுபவிக்கப் பெற்றிலீரன்றோ. [அப்போது மணவாளமாமுனிகளுத்ஸவமென்று நடைபெறவும் அவ்வானந்தத்தை அநுபவிக்கவும் ப்ராப்தமாகவில்லையே.] ஆகலால் இவ்வகையால் தேவரீரைவிட அடியேனே பாக்யசாலியாவேன். (௧௩)

अन्येषामपि यद्यपीह बहुधा संपद्यते ह्युत्सवः
श्रीमद्रम्यमुनेर्महोत्सवसमारोहः किलान्यादृशः ।
भास्वान्यावदुपैतुमिच्छति तुलाराशिं तदानीं प्रभृ-
त्यस्माकं हृदि निस्तुलः खलु चलत्युत्साहनित्योत्सवः ॥१४॥

திவ்ய தேசங்களில் மற்றும் பல ஆசிரியர்களுக்கும் உத்ஸவம் நடைபெற்றாலும் மணவாள மாமுனிகளுத்ஸவத்தின் சீர் விலக்ஷணமானதே. ஐப்பசி மாதம் அவதரிக்கப் போகிறதென்னும் போதே பிடித்து எமது நெஞ்

http://acharya.org

இல் நடைபெறும் உத்ஸாஹ மஹோத்ஸவத்தை என் சொல்வோம். (எ௪)

रंगाधीश्वर एक एव भगवानर्चासु धन्यो मुने
यस्ते शिष्य इति प्रसिद्धिमनघामद्यापि संरक्षति ।
कुम्भे मासि वलक्षपक्षलसिते द्वादश्यभिख्ये तिथौ
यस्मादध्ययनोत्सवं च भवतो निर्वर्तयन् मोदते ॥७५॥

மணவாள மாமுனிகளே! அர்ச்சா மூர்த்திகளில் ஸ்ரீரங்கநாதனொருவனே பாக்யசாலி. அப்பெருமானே யன்றோ தேவரீருக்கு சிஷ்யனாக அமைந்த பெருமையை எனைக்கும் காப்பாற்றி வருகிறான். ஒரு ஆசிரியர்க்கும் நடைபெறாத திருவத்யயனத் திருநாளை மாசிமாத சுக்ல பக்ஷ த்வாதசியன்று தேவரீருக்கு அப்பெருமான் நடத்திப்போருவது சிஷ்யக்ருத்யம் அவர்ஜநீயம் என்றன்றோ? (எரு)

अथाहं वरयोगिवर्य भवतः स्तोत्रे प्रवृत्तो मुदा
चिन्तालेशविनाकृतस्सरभसं पद्यानि विज्ञापये ।
स्तोत्रं हन्त समाप्तिमेष्यति भवन्माहात्म्यदुग्धोदधौ
छिन्ना एव हि शीकराः परिचिताः पूर्त्या कथं वर्णये ॥७६॥

மணவாளமாமுனிகளே! இன்று அடியேன் தேவரீரைத் துதிக்கவிழிந்து, சிறிதும் ஆலோசனையின்றியே இங்ஙனே ச்லோகமாலிகையை விரைவாகவே விண்ணப்பம் செய்துவருகிறேன்; இந்த ஸ்தோத்திரமோ முடிவு

பெறப்போகின்றது. தேவரீருடைய பெருமைக்கடலிலே சில திவலைகள் மாத்திரமே அநுபவிக்கப் பட்டன; முழு வதும் அநுபவிக்க எங்ஙனே முடியும்? (எசு)

मन्दप्रज्ञ इतीरितोऽप्यहमहो कान्तोपयन्तर्मुने !
विश्रान्ति लवलेशतोऽप्यकलयन् त्वद्वैभवोल्लासिनीः ।
पद्यानां ततीरजस्रममितास्स्वानन्दमुत्पादयन्
प्राज्ञाग्रेसर इत्युपाधिमलभे श्रीमत्कृपां किं ब्रुवे ॥ ७७ ॥

மணவாள மாமுனிகளே! அடியேன் மந்தமதி யென்று பேர் பெற்றவனாயினும், தேவரீருடைய பெரு மைகளை விளக்கும் ச்லோகங்களையே இடைவிடின்றித் தொடுத்துக் கொண்டிருக்கின்றேனாதலால் மஹாப்ராஜ்ஞ னென்று விருது பெற்றேனேன்; தேவரீருடைய திரு வருளை என் சொல்வேன்? (எஎ)

मन्त्रं त्वद्विषयं समस्तभगवत्सद्मस्वजस्रप्रथं
दृष्ट्वा केचन जाल्मका अथ परं पद्यं समुत्पाद्य च ।
भूयो भूय इह प्रकाममुपयन्त्युच्चैः पराभूतिमि-
त्येतत्सुष्ठु विजानतामपि बत त्वद्वैभवं दुर्ग्रहम् ॥ ७८ ॥

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய தனியனை ஸ்ரீசைலேசத் திருமந்த்ரம் ஸகல திவ்ய தேசங்களிலும் புகழ் பெற்று வருவதைக் கண்டு பொறாதார் சிலர் தாம்

http://acharya.org

வேறொரு பக்ஷத்தை ஸ்வீகரித்து அதுக்கடி ப்ரபலமான பரிபவத்தைப் பெற்று வருகிறார்களென்பதை நன்கு அறிந்தேயிருக்குமவர்கட்கும் அந்தோ! தேவரீருடைய பெருமை தெரியவில்லையே. (௭௮)

उक्तिस्सत्यतमा तवैव विलसत्यन्यस्य कस्यापि नै-
त्यात्मीयानुभवावगाहि तदिदं पूर्वे महान्तोऽब्रुवन् ।
स्वामिन् सुन्दरयोगिवर्य भवतः श्रीसूक्तिरत्नाकरे
संसृष्टे सति सत्यमुक्तमिदमित्युद्घोषणा युज्यते ॥ ७९ ॥

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய திவ்யஸூக்திகளே பொய்யொன்றுமில்லாதவை என்கிற உண்மையை நன்கு அநுபவித்துத் தெரிந்துகொண்ட பூருவர்கள் * பொய்யிலாத மணவாளமாமுனி புந்தி வாழி * என்று வாழ்த்தினார்கள்; தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளை ஆராயுமளவில், அந்த வாழ்த்து ஸத்யமானதேயென்று பறைசாற்றத் தட்டில்லை. (௭௯)

नन्ताऽनन्तपदारविन्दयुगले श्रेयो भजेद्वा न वे-
त्यत्र संशय एव काममुदियादित्यस्ति शास्त्रस्थितिः ।
नन्तॄणां वरयोगिपादकमले श्रेयांसि सर्वाण्यपि
प्रादुष्ष्युः विशयावकाशविधुरं निश्चप्रचं युज्यते ॥ ८० ॥

* ஸித்திர் பவதி வா நேதி ஸம்சயோச்யுதஸேவி நாம் * என்று பகவானைப் பற்றினவர்களுக்குப் பேற்றில்

http://acharya.org

வர்த்தமையே புள்ளதாக சாஸ்த்ரம் முறையிடுகின்றது; அங்ஙனன்றிக்கே, மணவாளமாமுனிகளின் திருவடிகளைப் பற்றினார்க்கு ஸகல ச்ரேயஸ்ஸுக்களும் மல்குமென்று இவ்வளவும் அறுதியிடப் பட்ட விஷயம். (அ0)

यन्त्रसंयमिनां वरो मुनिवरः कान्तोपयन्ता गुरुः
श्रीशैलेशगुरूत्तमाङ्घ्रिशरणो भोगीश्वरांशो मुनिः ।
श्रीमद्रम्यवरोपयन्तृयमिराडित्यादिनामावलीं
नित्यं ध्यायति मानसं मम ततश्शुद्धिं परां विन्दति ॥८१॥

பெரிய ஜீயர், மணவாளமாமுனிகள், அழகிய மணவாள மாமுனிகள், திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் வாழ்ந்தவர், திருவனந்தாழ்வான் திருவவதாரமானவர் என்கின்றவை நாமாவளிகளை என்னுடைய நெஞ்சம் நிச்சலும் சிந்தை செய்து தூய்மை பெறுகின்றது. (அக)

(अथ वा श्लोकान्तरम् ।)

रम्ये कुत्र वरो मुनीन्द्र इति ये पृच्छन्ति तेभ्यो ब्रुवे
स्वानुध्यानपरान्तरङ्गकुहरे दिव्येषु देशेष्वथ ।
श्रीमद्द्राविडदिव्यवेदनिनदोत्थानस्थलीषूल्लसेत्
इत्याहुः, मम मानसे परमसौ तैस्साकमास्ते ध्रुवम् ॥८२॥

மணவாள மாமுனிகள் எங்கு எழுந்தருளியுள்ளார் என்று கேட்டால், தம்மைச் சிந்திப்பார் சிந்தையிலுள் ளும், திவ்ய தேசங்களிலும், திருவாய்மொழியின் இன்

http://acharya.org

ளிகை மன்றுமிடங்களிலும் எழுந்தருளியிருப்பதாகப் பலரும் கூறுவர்; அடியேன் விண்ணப்பம் செய்வது அங்ஙனன்று; அவையெல்லாவற்றிலும் கூட என்னுள்ளத்துள்ளே புறையின்றி யென்பதே உண்மை. (௮௨)

मन्त्रो यस्य मनीषिणां सुकृतिनां सर्वस्वभूतो जयन्
धत्तेऽन्यादृशधन्यतां हि निखिलेऽप्यर्चावतारस्थले ।
तस्य श्रीवरयोगिनो गुणगणानाम्रेडयन्ती स्तुतिः
सेयं सर्वफलप्रदा सुमनसां वक्त्रेषु जेजीयताम् ॥ ८३ ॥

விவேகிகளான பாக்யசாலிகளுக்கு ஸர்வஸ்வமுமான தமது தனியனால் அர்ச்சாவதாரஸ்தலங்களை யெல்லாம் புனிதமாக்கி யருளாநின்ற மணவாள மாமுனிகளின் திருக்குணங்களைப் பன்னியுரைப்பதும் ஸகல பலன்களையு மளிப்பதுமான இந்த ஸ்துதியானது வித்வான்களின் வாக்கிலே விளங்குக. (௮௩)

(यद्वा श्लोकान्तरम्)

मन्यन्तामिह यच्च किञ्चिदपि वा क्षुद्रा जडाः पामराः
सोऽयं स्तौति वरोपयन्तृयमिनं त्वेकं सदेतीर्ष्यया ।
सत्यं वच्मि शठारिलक्ष्मणमुनिश्रीमत्कलिध्वंसना-
द्याचार्येष्वपि मन्दभक्तिरमुं ध्यायन्महायोगिनम् ॥ ८४ ॥

அடியேன் மணவாள மாமுனிகளொருவரையே பெருக்கத் துதிக்கின்றேனென்பது பற்றிப் பொறாமையால் யார் எதுவேணும் சொல்லுக; ஸத்யமாக விஞ்ஞாபிக்

http://acharya.org

[illegible] ; மாமுனிகளைச் சிந்தை செய்யப் புகுந்தபின்பு, ஸம்ப்ரதாயமார் எம்பெருமானார் நம்பிள்ளை முதலானார் திறத்தில் அடியேன் பக்தி குறையப்பெற்றேன். ஆகலால் மாமுனிகளையே துதிப்பது அடியேனுக்கு நித்யகால க்ஷேபமாயிற்று. (௮௪)

(यद्वा श्लोकान्तरम् ।)

मन्दप्रज्ञजना अपि श्रममृते जानन्तु यथार्थमि-
त्युत्कण्ठावशतो मुनिर्वरवरः स्तोत्राणि भूयांस्यहो ।
द्राक्षापाकमनोहराणि सृजति प्रेम्णा मदीयान्मुखात्
आचार्यप्रवरस्य तस्य करुणा कस्य स्तुतेर्गोचरः ॥ ८५ ॥

இவை ஸம்ஸ்க்ருத ச்லோகங்களாயிருந்தாலும் இவற்றின் பொருளை ஸாதாரண புத்திமான்களும் எளிதாக அறிந்துகொள்ள வேணுமென்று நாரிகேளபாக மன்றிக்கே த்ராக்ஷாபாகமாக இத்தகைய ஸ்தோத்ரங்களை மணவாள மாமுனிகள் என்வாக்கில் நின்றும் அன்போடு வெளியிடுவித்தருள்கின்றார் ; அப்பேராசிரியரின் பரம கிருபையை என்னென்பது! (௮௫)

श्रीवैष्णवानां गोष्ठीषु तद्दास इति विश्रुतः ।
श्रीशैलेशदयापात्रस्तोत्रमेतदविज्ञपत् ॥

ஸ்ரீகாஞ்சி அண்ணங்கராசார்ய ஸ்ரீவைஷ்ணவதாஸன்
விண்ணப்பஞ் செய்த
ஸ்ரீசைலேசதயாபாத்ர ஸ்தோத்ரம்
முற்றுப் பெற்றது.

http://acharya.org

श्रीवैष्णवसौभाग्ये द्वितीयं

॥ श्रीमद्वरवरमुनिवैभवस्तोत्रम् ॥

ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யத்தில்

ஸ்ரீவரவரமுநிவைபவஸ்தோத்ரம்.

श्रीशैलेशेतिमन्त्रस्थवर्णानुक्रमशोभितम् ।
आचार्यसार्वभौमस्य स्तोत्रं हृद्यं निगद्यते ॥

"ஸ்ரீசைலேச தயாபாத்ரம்" என்கிற தனியனிலுள்ள முப்பத்திரண்டு அக்ஷரங்களில் ஒவ்வொரு அக்ஷரத்தையும் அடைவே ஒவ்வொரு ச்லோகத்தின் முதலெழுத்தாகக் கொண்டது இந்த ஸ்தோத்ரம்.

श्रीमद्वरवरमुनये गुणगणनिधये सदा नतिं कलये ।
यत्सूक्तिकल्पलतिका कांक्षितमखिलार्थमनुपदं दिशति ॥ १ ॥

கற்பகக்கொடிபோல் விரும்பிய பொருளனைத்தையும் பதந்தோறும் அளிக்கவல்ல ஸ்ரீஸூக்திகளையருளிச் செய்தவரும் ஸமஸ்த திருக்கல்யாணகுணங்களுக்கும் கொள்கலமுமான மணவாள மாமுனிகளை எப்போதும் வணங்குவன்.

http://acharya.org

शैल इव सूक्तिसरितां छायातरुरिव भवार्तिखिन्नानाम् ।
रविरिव दुर्ज्ञानतमसां वरवरमुनिवर्य भुवि भवान् विबभौ ॥२॥

மணவாளமாமுனிகளே ! தேவரீர், ஸ்ரீஸூக்திகளா கிற புண்ணியநதிகளுக்கு மலைபோல் உத்பத்திஸ்தானமா யும், ஸம்ஸாரதாபங்களினால் வருந்தினவர்களுக்கு நிழல் தரும் மரத்தைப்போன்றவராயும், அஜ்ஞானமாகிற இருளைத் தொலைப்பதில் இரவிபோன்றவராயும் விளங்கினீர். (உ)

लेशोऽपि यस्य सूक्तेः मनसि ध्यातोऽत्र मुदमुदञ्चयति ।
सोऽयं वरवरयोगी सूते भक्तिं स्वकीयपदपद्मे ॥ २ ॥

தமது ஸ்ரீஸூக்திகளில் ஸ்வல்பபாகத்தைச் சிந் தனைசெய்தாலும் ஆனந்தம் பொங்கிவரும்படியாக அவற்றைத் திருவாய்மலர்ந்தருளிய மணவாளமாமுனிகள் தமது திருவடித்தாமரைகளில் பக்தியை விளைத்தருளா நின்றார். (ங)

शमयति दुरितमशेषं जनयति परमं प्रबोधमिह यस्य ।
सूक्तिततिरेष मम हृदि जागर्ति सदैव वरवरो योगी ॥ ४ ॥

தீவினைகளனைத்தையும் தொலைத்து நல்லறிவை நல் குகின்ற திவ்யஸூக்திகளைத் திருவாய்மலர்ந்தருளின மணவாளமாமுனிகள் எப்போதும் எனது உள்ளத்திலே விளங்காநின்றார். (ச)

http://acharya.org

दयया निर्हेतुकया हरिरिह संरक्षतीति यत्सूक्तिः ।
विशदयति मुनिवरोऽसौ विलसति निर्हेतुकरुणया हृदि मे ॥

எம்பெருமான் தனது நிர்ஹேதுக கருணையினாலே நம்மைக் காத்தருள்கிறானென்னுமிடத்தை விளங்கக்காட்டும் ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்தருளின மணவாளமாமுனிகள் என்னுள்ளத்தில் நிர்ஹேதுக கருணையோடு எழுந்தருளியுள்ளார். (௫)

पातु सकलोऽपि कालो वरवरयोगीन्द्रविवृतसकलार्थे ।
श्रीवचनभूषणाख्ये दिव्ये शास्त्रेऽस्य दासदासस्य ॥ ६ ॥

மணவாள மாமுனிகளின் வியாக்யானங்கொண்டே ஸகலார்த்தங்களையும் அறியக்கூடியதாகவுள்ள ஸ்ரீவசந பூஷணமென்னும் திவ்ய சாஸ்த்ரத்தின் அநுபவத்திலேயே அடியேனுடைய வாழ்நாளெல்லாம் செல்லவேணும். (௬)

पातु वरयोगिवर्यो यो हि रहस्यत्रयार्थमनवद्यम् ।
पावनफणितिभिरद्भुतसन्दर्भाभिः प्रसादयामास ॥ ७ ॥

ரஹஸ்யத்ரயார்த்த விவரணமாகப் பிள்ளையுலகாசிரியர் பணித்தருளின முமுக்ஷுப்படியை வியப்புறிய புனிதமான திவ்யஸூக்திகளினால் ஸத்ஸம்ப்ரதாயப்படியே வியாக்கியானித்தருளின மணவாளமாமுனிகள் நம்மைக் காத்தருள்க. (௭)

http://acharya.org

श्रीमल्लोकार्यमुनेः ललितसरण्यैव बोधयन् योऽस्मान् ।
तत्त्वत्रयस्य विवृतिं वरवरयोगी चकार स गुरुर्नः ॥ ८ ॥

பிள்ளைலோகாசிரியர் பணித்தருளிய தத்வத்ரய மென்னும் ரஹஸ்யக்ரந்தத்தை வியாக்கியானித்தருளும் முகத்தால் ஸகல வேதாந்தஸாரப் பொருள்களையும் எளிய நடையில் உபகரித்தருளின மணவாள மாமுனிகளே நமக்கு அகவிருளை அகற்றவல்ல பேராசிரியர். (அ)

...जगति मदीया तावता वाचो निषेव्य विरमन्ती ।
वरवरमुनीन्द्रफणितिषु दिव्यास्वनुभूतिमविरतां धत्ते ॥ ९ ॥

இவ்வுலகில் அவதரித்துள்ள பலபலவாக்குக்களை அநுபவித்து ஓய்வு அடைகின்ற எனது புத்தியானது மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளின் அநுபவத்திலிருந்து மாத்திரம் ஒருபோதும் ஓய்வடைகின்றதில்லை. "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுதென் னாராவமுதமே." என்னுமாபோலே நித்யாபூர்வமானவை மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளென்க. (கூ)

भवभयभेषजमतुलं विभाति यत्प्रोक्तविवृतिविशदार्थम् ।
आचार्यहृदयशास्त्रं स जयतु सौम्योपयन्तृयोगीन्द्रः ॥ १० ॥

அழகியமணவாளப்பெருமாள் நாயனாருளிச்செய்ததும் பிறவியென்னும் நோய்க்கு மருந்துமான ஆசார்ய ஹ்ருதய மஹாசாஸ்த்ரத்தின் ஸகலார்த்தங்களையும் விச

http://acharya.org

தமாகக் காட்டவல்ல வியாக்கியானத்தைத் திருவாய்மலர்ந்தருளிய மணவாளமாமுனிகள் வாழ்க. (௧௦)

भक्त्या कथयत सततं वरवरमुनिवक्त्रदिव्यकमलसुधाम् ।
उपदेशरत्नमालां ययैव शोभेत श्रुति सतां हृदयम् ॥ ११ ॥

மணவாளமாமுனிகளின் முகாரவிந்தத்தின் மகரந்தம் போன்றதும் ஸத்துக்களின் ஹ்ருதயத்திற்கு ஶோபாவஹமுமான உபதேசரத்தினமாலையென்னும் திவ்யப்ரபந்தத்தை அன்புடன் ஓதுமின். [இதில் (க்த்ய) இரண்டாமெழுத்து.]

दिशतु मयि दिव्यदृष्टिं द्रमिडोपनिषन्महार्थसारं यः ।
शतकेन दिव्यवचसां श्रोत्रे कान्तोपयन्तृमुनिवर्यः ॥ १२ ॥

திருவாய்மொழியின் உட்பொருள்களைத் திருவாய்மொழி நூற்றந்தாதியென்னும் திவ்யப்ரபந்த மூலமாக வெளியிட்டருளின மணவாளமாமுனிகள் அடியேனுக்கு திவ்யசக்ஷுஸ்ஸை அருளவேணும். (௧௨)

गुरुभिरिह बहुभिरमिता गिरः प्रयुक्ता लसन्ति, विलसन्तु ।
सुन्दरजामातृमुनेस्सूक्तिषु माधुर्यमप्रतिद्वन्द्वम् ॥ १३ ॥

இவ்வுலகில் பல பல ஆசிரியர்களால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகள் அளவுகடந்தவை யுண்டெனிலும் மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளிலுள்ள இனிமை இணையற்றதேயாம். (௧௩)

गुणलवदरिद्रमेनं दासं वरयोगिपुङ्गवः स्वविषयम् ।
अर्थमनर्थमपार्थं परया कृपया मनोभवलक्षितम् ॥ १४ ॥

http://acharya.org

ஹ்ருதயத்தையும் சித்திரமில்லாத அறிவோருக்கும் மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளின் ஆழ்பொருளனைத்தையும் நன்கு தெரியும்படி அந்த மாமுனிகளின் திருவருளை வாய்க்கவேணும். [இந்த ச்லோகத்தில் ணகாரம் இரண்டாமெழுத்தாக அமைக்கப்பட்டது.]

अम्भोधेर्गम्भीरतामपि अहह ! परिच्छेत्तुमीशते कतिचित् ।
वरयोगिसूक्तिसागरगम्भीरिमा तु गोचरो न नृणाम् ॥ १५ ॥

“அம்போதேர் கம்பீரதா” என்னப்பட்ட கடலின் காம்பீர்யத்தையும் அளவிடவல்லார் சிலருண்டு; மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்திக் கடலின் காம்பீர்யம் மாத்திரம் ஒருவர்க்கும் நிலமன்று. [இந்த ச்லோகத்தில் (ரண) என்கிற எழுத்து இரண்டாமக்ஷரமாக அமைக்கப்பட்டது.] (௧௫)

वंशे सुमहति जननं विवेकपुष्टिः शमादिगुणपूर्तिः ।
वरयोगिदिव्यसूक्तिप्रद्वेषफलं प्रचक्षते प्राज्ञाः ॥ १६ ॥

மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளில் பக்தி விசேஷம் இல்லாவிடினும் அத்வேஷமாவது இருக்குமாகில் அதன்பயனாக மாசில்குடிப்பிறப்பும் நல்லுணர்வின் மிகுதியும் சமதமாதி குணபூர்த்தியும் விளையுமென்று மஹான்கள் கூறுகின்றார்கள். (௧௬)

प्रतिपत्तिपुनरवतारो वरवरमुनिरेष इति विनिश्चेतुम् ।
उपपत्तयो हि जाग्रति भूयस्यस्तास्सदा हृदा कलये ॥ १७ ॥

மணவாளமாமுனிகள் எம்பெருமானாருடைய அபர அவதாரமேயென்று அறுதியிடுவதற்குப் பலபல சான்றுகள்

http://acharya.org

உள்ளனவாதலால் அவற்றையே எப்போதும் சிந்தை செய்வேனாக. (கஎ)

तीर्त्वा भवाम्बुराशिं यदि दिव्यमासादयेयमपि तत्र ।
कान्तोपयन्तृमुनिवरदिव्योक्तिसुधैव भुक्तिरस्तु मम ॥ १८ ॥

பிறவிக்கடலைக்கடந்து ஒருகால் விண்ணுலகம் சென்று சேரப்பெறுவேனாகிலும் அங்கும் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தியமுதமே அடியேனுக்கு உணவாக வேணும். (கஅ)

द्रवति दृषदप्यहो यत्प्रकथितयतिराजविंशतिश्रवणात् ।
शमदमसुखगुणशेवधिरेष मुनिः पातु वरवरो जगतीम् ॥ १९ ॥

கேட்டளவிலே கல்லும் உருகும்படியான கடையில் அமைந்த யதிராஜவிம்சதியை அருளிச் செய்தவரும் சமதமாதி ஸத்குணநிதியுமான மணவாளமாமுனிகள் உலகைக் காத்தருளவேணும். (க௯)

प्रथयति यदुदितभगवद्गीताव्याख्यानमद्भुतं भावम् ।
कथयतु मम मुखमनिशं तस्यैव मुनेः पटूनि नामानि ॥ २० ॥

பகவத்கீதையின் அற்புதமான தாற்பரியத்தை விளங்கக்காட்டவல்ல கீதாதாத்பர்யதீபமென்னும் வியாக்கியானத்தை யருளிச்செய்த மணவாளமாமுனிகளின் சிறந்த திருநாமங்களையே என்வாய் உரைத்திடுக. (உ௦)

वरदाधिराजमङ्गलमभिरामवरो मुनीश्वरो ह्ययम् ।
यः प्रोवाच सदा मे वक्त्रं तस्यैव मङ्गलं ब्रूताम् ॥ २१ ॥

http://acharya.org

பெருமானான் விஷயமாகப் பரமபோக்யமான மங்களாசாஸந ஸ்துதியை அருளிச்செய்த மணவாள மாமுனிகளுக்கே என் வாக்கு அவ்வாறும் பல்லாண்டு பாடக்கடவது. (உக)

[illegible] हृदय सदा भव वरवरमुनिवर्यविवृतिमहितायाम् ।
[illegible]पतिसुगुणवर्णनविचक्षणायां प्रपन्नगायत्र्याम् ॥ २२ ॥

எம்பெருமானாருடைய திருக்குணங்களை அழகாகப் பேசவல்லதும் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தினால் சிறப்புற்றிருக்குவதுமான இராமானுச நூற்றந்தாதியில் நெஞ்சே! எப்போதும் ஊற்றமுற்றிருப்பாயாக. (இந்த ச்லோகத்தில் அகாரம் மூன்றுவது அக்ஷரமாக அமைக்கப்பட்டது.) (உஉ)

[illegible]विलुमपि यदीक्षय जगतीं वरयोगिभक्तिभावनया ।
[illegible]यत, काममेषा पुनाति सत्यं छलात्मिकाऽपि सती ॥२३॥

கபடபக்தியினால் உலகை வஞ்சிக்க நினைத்தாலும் அந்தக் கபட பக்தியையும் மணவாளமாமுனிகள் விஷயமாகவே கொள்வது நலம். ஏனென்னில், மாமுனிகள் விஷயத்தில் பக்திபாவனை செய்யினும் ஆத்மா புனிதமாகுமன்றோ. "பொய்ப்பேதைமைசொல்லி" இத்யாதி. (உங)

देयाद्वरवरयोगी गोदाजनकीयदिव्यसूक्तितते: ।
स्वात्मकृतविशदविवृतौ सुगाढमवगाढमन्तरात्मानम् ॥ २४ ॥

மணவாளமாமுனிகள் பெரியாழ்வார் திருமொழிக்குத் தாமருளிச்செய்த இனிய வியாக்கியானத்தில் மிக

http://acharya.org

வும் ஆழ்ந்து அவகாஹிக்கவல்ல உள்ளத்தை எனக்கு அருள்புரியவேணும். (௨௪)

रमयति मम मतिमविरतमाचार्यवरस्य वरवरस्य मुनेः ।
सकलप्रमाणसंग्रहसमाह्वयं तत्प्रसिद्धकृतिरत्नम् ॥ २५ ॥

ஆசார்ய ஸார்வபௌமரான மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸகலப்ரமாண ஸங்க்ரஹமென்னும் [பிரமாணத்திரட்டு] திவ்யக்ரந்தம் என்னுள்ளத்தை எப்போதும் உகப்பிக்கின்றது. (௨௫)

य इह वरयोगिवर्यः प्रणिनायार्तिप्रबन्धमार्तिभरात् ।
अपनुदतु सोऽयमार्तीरखिला अपि नित्यमधिवसन् जगतीम् ॥

இக்கலத்தில் அடிக்கொதிப்பால் ஆர்த்திப்பிரபந்த மருளிச் செய்தருளின மணவாளமாமுனிகள் 'இன்னமொரு நூற்றாண்டிரும்' என்ற வாழ்த்துப்படியே இவ்வுலகில் எக்காலுமெழுந்தருளியிருந்துகொண்டு நமது ஆர்த்திகளைத் தீர்த்தருளவேணும். (௨௬)

जाया जननी जनकः सोदर इति तेषु तेषु यः प्रेमा ।
इह भवति सोऽयमखिलः श्रीमद्वरयोगिचरणयोर्मेऽस्तु ॥ २७ ॥

தாரமென்றும் தாயென்றும் தந்தையென்றும் ஸஹோதரனென்றும் பலரிடத்தும் பரவிப்பாயக் கூடிய அன்பு முழுவதும் அடியேனுக்கு மணவாளமாமுனிகளின் திருவடிகளிலேயே பதியக்கடவது. ஸகலவித பந்துக்களும் மாமுனிகளேயென்கை. (௨௭)

http://acharya.org

माधव! मुकुन्द! मुरहर! मधुसूदन! केशवेति नामोक्तीः ।
मुक्त्वा कथयतु सततं वरवरमुनिनाम मामकं वदनम् ॥ २८ ॥

என்னுடைய வாய், மாதவ! முகுந்த! முராரே! மதுஸூதந! கேசவ! என்கிற திருநாமஸங்கீர்த்தனங்களை விட்டுவிட்டு எப்போதும் மணவாளமாமுனிகளின் திருநாமங்களையே கூறிப்பேறவேணும். (௨அ)

सततमपि मानसं मे सुन्दरजामातृयतिपतेः पदयोः ।
सुस्थिरमास्ते गुरुवरकरुणामहो कथं कथये ॥ २९ ॥

என்னுடைய நெஞ்சு சிறிதாகில்லாது அலைபாய்வதே யானாலும் மணவாளமாமுனிகளின் திருவடிகளில் மாத்திரம் ஸுஸ்திரமாக ஈடுபட்டு அன்பை அடைந்திருக்கின்றது. இவ்வளவு அருள்புரிந்த அந்த மாமுனிகளின் திருவருள் மகிமையினை புகழ்வேன். (௨௯)

देवो स्वयमिह यस्मिन् अन्तेवासी भवन् कृतार्थोऽभूत् ।
स खलु वरयोगिवर्यः कथमिह वर्ण्येत मादृशां वचसा ॥ ३० ॥

ஸ்ரீரங்கநாதனையும் தம் பக்கலிலே சிஷ்யனாகக் கொண்ட மணவாளமாமுனிகளின் மஹிமை என்போன்ற சிறியோர்களின் இனிய புன்கவிதைகளால் வருணித்துத் தலைக்கட்டக்கூடியதோ? (௩௦)

श्रुत्वेति वरवरमुनिवरसूक्तिसुधास्वादमुदितहृदङ्गी ।
दिव्यं पठति मन्त्रं स सर्वमन्त्रान् विजित्य भुवि भाति ॥३१॥

http://acharya.org

மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தியம்ருதத்தைப் பருகிப் பருகிக் களித்த ஸ்ரீரங்கநாதன் சோதிவாய் திறந்து பணித்த * ஸ்ரீசைலேசத்தனியன் உலகிலுள்ள ஸகல மந்த்ரங்களையும் வென்று வீறுபெற்று விளங்குகின்றது.

निखिलाप्यर्चामूर्तिः नित्यं यन्मन्त्रनिशमनात्तुष्टिम् ।
भजते, वरवरमुनिवरदैवतमन्त्रोऽयमस्तु मे जप्यः ॥ २२ ॥

ஆங்காங்குக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களனைவரும் மணவாளமாமுனிகளையே தேவதையாகக்கொண்ட எந்த ஸ்ரீசைலமந்த்ரத்தையே நாடோறும் திருச்செவிசாத்தித் திருவுள்ளம் பூரிக்கின்றனரோ அந்த மந்த்ரத்தையே நான் எப்போதும் ஜபிக்கக்கடவேன். (௨௨)

महतां शुभकुलजनुषा महनीयाचार्यकरुणया च तथा ।
श्रीविष्णवाह्विदासो वरवरयोगिस्तुतिं व्यजिज्ञपत ॥

ஸ்ரீவைஷ்ணவதாஸனென்னுமடியேன் பெரியோர்களின் நற்குலத்திற் பிறந்ததனாலும் பேராசிரியர் திருவருளுக்கு இலக்காகப் பெற்றதனாலும் இந்த ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ் செய்யலானேன். *

ஸ்ரீகாஞ்சி அண்ணங்கராசார்ய ஸ்ரீவைஷ்ணவதாஸன்
விண்ணப்பஞ் செய்த
ஸ்ரீவரவரமுனிசைல ஸ்தோத்ரம்
முற்றுப் பெற்றது.

http://acharya.org

श्रीवैष्णवसौभाग्ये तृतीयं

श्रीमद्वरवरमुनिस्तोत्ररसायनम् ॥

ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யத்தில்

ஸ்ரீமத்வரவரமுநி ஸ்தோத்ர ரஸாயநம்.

श्रीशैलेशेति मन्त्रस्थवर्णानुक्रमशोभितम् ।
लघ्वक्षरमयं स्तोत्ररसायनमुदीर्यते ॥

दीर्घाक्षरप्रवेशोऽत्र यस्मान्न घटते ततः ।
मन्त्रस्थदीर्घवर्णानां ह्रस्वतैवात्र सह्यताम् ॥

ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்னும் தனியனிலுள்ள எழுத்துக்களின் அடைவே நெடிலெழுத்து இன்றியே குறிலெழுத்துக்களையே அமைத்து இந்த ஸ்தோத்ர ரஸாயநம் இயற்றப்படுகிறது. (பாதங்களின் முடிவில் மாத்திரம் நெடிலெழுத்து இருப்பது விருத்தமன்று.) இந்த ஸ்தோத்ரத்தில் தீர்க்காக்ஷரம் புகாமையினாலே ஸ்ரீசைலேசத் தனியனில் தீர்க்கமாகவுள்ள அக்ஷரங்களும் இதில் ஹ்ரஸ்வமாயிருப்பது பொருந்தும்.

http://acharya.org

श्रितजनविरचितदुरितगणं क्षणलवविदलितमकुरुत यः ।
स दिशति वरवरमुनिगुरुराट् मम हृदि निजशुभतनुमनिशम् ॥

அடியார்கள் செய்த பாவங்களையெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் நிமிஷத்தில் நாசமாக்குகின்ற மணவாள மாமுனிகள் தமது திருமேனியை எப்போதும் என்னுள்ளத்துள்ளே காட்டியருளாநின்றார். (௧)

शमदमसुखशुभगुणजलधे सुविशदविवरणकरणपटो ।
अनुदिनमिह श्रुति तव यशसां ततिमहमनुभवविषयमधाम् ॥२॥

சமதமாதி குணக்கடலே! மிகத்தெளிவான வியாக்யானங்களை யருளிச் செய்யவல்லவரே! மணவாள மாமுனிகளே! அடியேன் இங்கு நாடோறும் தேவரீருடைய திருப்புகழ்களையே அநுபவியாநின்றேன். (௨)

लघु मयि विरचय गुरुकरुणां प्रदिशति मम शुभमतिमिह या ।
वरमुनिवर! यदि न तव कृपा मम जनिरिह कथमुदितफला ॥

மணவாளமாமுனிகளே! அடியேனுக்கு நல்ல புத்தியை நல்குவதற்குச் சிறந்த திருவருளை என்மீது விரைவில் செய்தருளவேணும். அந்தத் திருவருள் இல்லையேல் என் ஜன்மம் எப்படி ஸபலமாகும். (௩)

शशधरपरिमितकरवदन! प्रकटितशुभतरगुणजलधे ।
शमधनमुनिवरपरिवृढ भोः! प्रजनय ननु मयि मतिमनघाम् ॥

திங்களைப்பழிக்கும் திருமுகமண்டலமுடையவரே.

http://acharya.org

[illegible]ங்களையெல்லாம் விளக்கக் காட்டியருளினவரே! [illegible]களான பதிகளுக்குள் தலைவரே! அடியேனுக்கு [illegible] புத்தியுண்டாகும்படி கல்கவேணும். (௪)

[illegible]मुपसृतजलजदृशो निपतनमयि ! मयि कलय मुने ! ।
[illegible] मयि न हि भवति यदि ध्रुवमथ मम जडपरिवृढता ॥

மணவாளமாமுனிகளே! சிறிது மலர்ந்த தாமரை போன்ற திருக்கண்ணோக்கத்தை அடியேன்மீது விழுந்தருளவேணும்; இவ்வருள் வாய்க்காவிடில் என்னிற் காட்டில் வேறொரு மூடன் உலகில் தேறமாட்டான். (௫)

[illegible]पतिमतरसमखिलमपि प्रथयति यदुदितविवरणवाक् ।
स जयतु वरमुनिरभिमतगुणामृतजलनिधिरिति विशदयशाः ॥६॥

தமது வியாக்கியான ஸ்ரீஸூக்திகளாலே ஸ்ரீராமா[illegible] ஸாரார்த்தங்களையெல்லாம் விளக்கினவரும் சிறந்த குணக்கடலென்று புகழ்பெற்றவருமான மணவாள மாமுனிகள் வாழ்க. (௬)

[illegible]जतरणिजमुखकपिभिस्सह कृतरघुवरपरिचरण ! ।
[illegible]विदभिमतकुशलबल ! प्रकटय मयि तव पृथुकरुणाम् ॥७॥

இளையபெருமாளாகத் திருவவதரித்து, திருவடி சுக்ரீவ மஹாராஜர் முதலான வானர முதலிகளோடு [illegible] பெருமாளுக்குக் கைங்கரியங்கள் செய்தருளின [illegible] இந்திரஜித்தை அடர்த்தவருமான மணவாள

http://acharya.org

மாமுனிகளே! அடியேன்மீது மிகவும் இரக்கமருள வேணும். (எ)

तनुरियमिह भुवि लसतु चिरं गुरुवर मुनिवर तव पदयोः ।
स्मृतिततिरविरतमिह घटते यदि मम तव शुभतरकृपया ॥८॥

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய திருவருளால் தேவரீரது திருவடிகளில் அடியேனுக்கு இடையறாத சிந்தனை நிகழுமாயின் இப்புவியில் அடியேன் சிரஞ்ஜீவியாக வாழப்பெறுவேனாக. (அ)

धियमहमनुपममहिमजुषा वरमुनिवर ! तव गुरुकृपया ।
तव गुणगणनुतिकलनविधौ अनुकलमनवधि विनिहितवान् ॥९॥

மணவாளமாமுனிகளே! ஒவ்வொரு நிமிஷமும் தேவரீருடைய திருக்குணங்களைத் துதிப்பதிலேயே என்னுடைய புத்தியையெல்லாம் உபயோகித்து வருகிறேன்; தேவரீருடைய சிறந்த திருவருளே இதற்குக் காரணம்.

भवभयजलनिधिजठरगतां घनकृप मुनिवर ! बहुजनताम् ।
करतलवितरणकुशलतया कलयसि गतशुचसमितशुभाम् ॥१०॥

அருள்மிகுந்த மணவாள மாமுனிகளே! பிறவிக்கடலினுள்ளே விழுந்து துவளும் பலபல ஜனங்களுக்குக் கைகொடுக்க வல்லமையினாலே அவர்களெல்லாரும் துன்பம் தீர்ந்து இன்பம் பெறுமாறு செய்தருளாநின்றீர். (௧௦)

http://acharya.org

[illegible]यतिपतिविरचितसकलकृतीर्मम हृदि लिख लिख रुचिरमुने ।
न च यतिपतिगुरुरिह भवतो न हि खलु कथमपि वहति भिदाम्॥

மணவாளமாமுனிகளே! எம்பெருமானாரும் தேவரீரும் வேற்றுமையல்லாமையாலே தேவரீரே எம்பெருமானாராக அமைந்து அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களையெல்லாம் என்னுள்ளத்துள் எழுதியருளவேணும்.

दिवि भुवि विरचय मम वसतिं गुरुवर ! मम न हि मनसि भिदा।
शुभगुणगणमनवरतं प्रकलय मम स्तुतिततिविषयम् ॥१२॥

மணவாளமாமுனிகளே! அடியேனை விண்ணுலகில் கொண்டுபோய் வைத்தாலும் இம்மண்ணுலகிலேயே வைத்தாலும் என்மனத்தால் வேறுபாடில்லை; எப்போதும் தேவரீருடைய திருக்குணங்களையே என்னுடைய ஸ்தோத்ரங்களுக்கு விஷயமாக்கிக்கொண்டிருக்க வேணுமென்பதொன்றே கோரிக்கை. (௧௨)

गुरुवर शठरिपुमुनिवचसां सुविमलसुविशदहृदयमहो ।
मम हृदि सततमघटितमथाः बत बत ! मयि तव बहुलकृपा ॥

மணவாளமாமுனிகளே! திருவாய்மொழியின் ஆழ்ந்த அழகிய கருத்தையெல்லாம் அடியேனது உள்ளத்தில் நன்கு பதிய வைத்தருளினீர்; அடியேன்பால் தேவரீருடைய திருவருள் மிகக்கனத்தது. (௧௩)

भजत वरमुनिपदकमलं प्रवदत वरमुनिशुभफणितिम् ।
कलयत वरमुनिपरिचरणं प्रविशत सुमहितपरमपदम् ॥१४॥

http://acharya.org

(மாகிலத்தீர்!) மணவாள மாமுனிகளின் திருவடியை வணங்குமின், ஸ்ரீஸூக்திகளைச் செப்புமின், அவர்க்கே கைங்கரியம் செய்மின்; இங்ஙனேயாகில் * நலமந்தமில்லதோர் நாடுபெறுவீர். (இந்த ச்லோகத்தில் முதலெழுத்தாக வரவேண்டிய மகாரம் இரண்டாமெழுத்தாக அமைந்துளது.) (கச)

रचयितुमहमिह तव नवनं वरमुनिवर! हृदि न हि कलये ।
तदपि च तव गुणततिरखिलाऽप्यहमहमिति हृदि नटतितमाम् ॥

மணவாள மாமுனிகளே! தேவரீரைத் துதிக்கவேணுமென்று அடியேன் நெஞ்சிற்கொண்டவனல்லேன்; ஆனாலும் தேவரீருடைய திருக்குணங்களெல்லாம் என்னெஞ்சில் அஹமஹமிகயா கூத்தாடுவதனால் இங்ஙனே துதிகள் அமைகின்றன. (இந்த ச்லோகத்தில் [ர்ண] என்கிற எழுத்துக்கு பதிலாக ரேபம் மாத்திரமே கொள்ளப்பட்டது.) (கரு)

वचसि च मनसि च सततमपि प्रथयसि मुनिवर! तव सुगुणान् ।
कथमपि न हि खलु गुरुरितरो मम हृदि पदमिह विनिहितवान् ॥

மணவாளமாமுனிகளே! என் வாக்கிலும் மனத்திலும் எப்போதும் தேவரீருடைய திருக்குணங்களை விளங்குமாறு செய்தருளினீர்; இனி வேறு எந்த ஆசாரியரும் என் மனத்தில் அடிவைக்க முடியாதபடி ஆய்விட்டது. (கசு)

http://acharya.org

[illegible] निरवधिकं विलसति वरमुनिवर! तदिदम् ।
[illegible]विप्रलपितं यदि किमु हतमिह ननु कथय ॥ १७

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய திருப்புகழ்
[illegible] பரவி "மணவாள மாமுனியே இன்னும்
[illegible] நூற்றாண்டிரும்" என்று விடுக்கவும் காடு
[illegible] வாழ்த்தும்படி அமைந்துளது. இப் பெருமை
[illegible] அபலாபம் செய்ய முயன்றதனால்
[illegible]?

(கஎ)

[illegible] दिनमिति भमिति तथाऽयनमिति विचलति समयगणे ।
[illegible] गुरुवर तव फणितेरनुभवविरहितमिह न सहे ॥ १८ ॥

மணவாளமாமுனிகளே! [illegible] நான் [illegible]
[illegible] என்கிறபடியே [illegible]ாகவும்
[illegible]ாகவும் அயநமாகவும் கழிந்து
[illegible] நாட்களில் ஒருநொடிப் பொழுதும் தேவரீ
ருடைய திவ்ய ஸூக்திகளின் அநுபவமின்றிக்கே யிருக்க
[illegible].

(கஅ)

[illegible] मुनिवर! तव फणितीः प्रणिदधदविरति मम हृदयम् ।
[illegible]मिदमभिहितवत् ह्रियमपि वत हृदि न हि कलये ॥

மணவாள மாமுனிகளே! தேவரீருடைய திவ்ய
[illegible] ஓய்வின்றிச் சிந்தைசெய்கின்ற என்மனம்
[illegible] மாபுருகுகின்றது. மஹா ந்ஞ தாக்கள்
[illegible] இவ்வார்த்தையை அல்பஜ்ஞனான அடி
[illegible] வதற்காக வெட்கமும் படுகின்றிலேன். (க௯

प्रथयति वरवरमुनिफणितिर्भगवति शुभगुणगणनिचिताम् ।
विलसतु मम मुख इयमनघा विदलितबहुतमकुमतिमता ॥२०॥

மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை விளக்குவது போலவே பல குத்ருஷ்டிமதங்களையும் கண்டித் தொழிக்கின்றன; இத்தகைய ஸ்ரீஸூக்திகள் எனக்கு வாசோவிதேயமாக வேணும். (௨௦)

वपुषि च वचसि च मनसि च मे मुनिवर तव शुभतमवपुषः ।
छविततिरविरतमभिलुठति प्रकथय कथमिदमघटत मे ॥२१॥

மணவாளமாமுனிகளே! எனது மனமொழி மெய்களில் தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹவொளியே இடையறாது புரள்கின்றது; இப்படிப்பட்ட பாக்கியம் பாவியேனுக்கு எங்ஙனே வாய்த்ததோ! (௨௧)

नतिततिरथ नुतिशतमथ च प्रचलति सुविशदमननकला ।
मुनिवर गुरुवर तव विषये त्रिकरणकृतिरियमनवधिका ॥२२॥

மணவாளமாமுனிகளே! அடியேனுடைய த்ரிகரண வ்ருத்தியும் தேவரீர் திறத்திலேயே பெருகிச் செல்லுகின்றது; தேவரீரையே தொழுவது உடலின் பணி; தேவரீரையே துதிப்பது வாக்கின் பணி; தேவரீரையே மனனம் செய்வது மனத்தின் பணி.

இந்த ச்லோகத்தின் முதலெழுத்து ணகாரத்திற்கு பதிலாக நகாரம் கொள்ளப்பட்டது. (௨௨)

http://acharya.org

वरकविरिति श्रुति विरुदधरो विलसति बहुबुधजन इह भोः ।
वरमुनिकविरिति शुभविरुदं मम पुनरनुपममतिमहितम् ॥२३॥

இப்புவியில் தைவ கடாக்ஷத்தாலே கவியியற்றும் வல்லமை வாய்ந்த பல பண்டிதர்கள் வரகவி யென்று விருது பெறுவதுண்டு; ஆனாலும் வரமுனிகவியென்று ஒருவரும் இதுவரையும் விருது பெறவில்லை; மணவாள மாமுனிகளையே இடைவிடாது துதிப்பதனால் அடியேனே அந்த உயர்ந்த விருதைப் பெற்றேனானேன். (உ௩)

फणधरनुतिततिरपि स्रवतो मम सरभसमनुदिनमुदियात् ।
वरमुनिशुभगुणसुरभिरहो ! विधुरविविलसितसममचला ॥२४॥

மணவாளமாமுனிகளின் திருப்புகழைப் பேசுவதென்றால் ஆதிசேஷனுடைய வாக்கிலிருந்து ஆயிரமாயிரம் ஸ்துதிகளும் எந்நேரமும் அவதரித்துக் கொண்டேயிருக்கும். அவை ஸூர்ய சந்திரர்களுள்ளளவும் விளங்கக் கூடும்.

रमयति मुनिवर मम हृदयं तव निरवधिशुभतनुसुषमा ।
अनुभवमनुपममहमिह मे कथमिव कथयितुमलमपि भोः ॥२५॥

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய திருமேனி அழகே அடியேனது உள்ளத்தை மகிழ்விக்கிறது; எனது ஒப்பற்ற அநுபவத்தை நான் எங்ஙனம் எடுத்துரைப்பேன்.

अहिपतिशठरिपुभुवनगुरुप्रभृतिषु गुरुषु च महितधिया ।
मुनिवर ! नुतिशतमभिहितवान् अहमनुशयमिह बहु कलये ॥

http://acharya.org

மணவாளமாமுனிகளே! எம்பெருமானார் நம்மாழ்வார் உலகாசிரியர் முதலான ஆசாரியர்கள் விஷயமாகவும் கௌரவபுத்தியுடன் நான் பல ஸ்துதிகளைப் பண்ணி விண்ணப்பம் செய்திருக்கிறேன்; ஆயினும், ஐயோ! அதெல்லாம் எதற்குச் செய்தோமென்கிற அநுதாபமே மிகவுமடியேனுக்குள்ளது. (உ௬)

जगदिदमनवधिसमयगणे सृजति च बहुतमगुरुनिवहम् ।
वरमुनिसमगुरुमदित न हीत्यहमिह शपथमभिहितवान् ॥२७॥

இவ்வுலகில் பலபல காலங்களில் [பலபல மதங்களில்] பலபல ஆசிரியர்கள் தோன்றியே வருகிறார்கள்: ஆயினும் மணவாள மாமுனிகளைப் போன்ற ஆசிரியர் எந்த மதத்திலும் தோன்றவேயில்லையென்று ஆணையிடுவேன்.

महिमसु मुनिवर ! तव निखिलेष्वपि लघुकणलवमनुभवितुम् ।
न हि पटुमतिरहमहह ! तथाऽप्यविरति तव शुभकृतिषु रसे ॥

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய பெருமைக் கடலில் ஒரு சிறு திவலையளவு கூட அடியேன் அநுபவிக்கவல்லவனல்லேன்; ஆயினும் ஓயாது தேவரீர் விஷயமான ஸ்துதிகளை எழுதுவதிலே ஊன்றிக்கிடக்கிறேன்.

तरलहृदहमपि वरयमिनि क्षणमपि न हि रुचिभरविरही ।
करिगिरिपतिमपि वरमुनिशरण्यमिति मतियुत इह कलये ॥२९॥

அடியேன் சஞ்சல சித்தனேயானாலும் மணவாள மாமுனிகளிடத்தில் அன்பு இன்றிக்கே ஒரு நிமிஷமும்

http://acharya.org

இல்லாமையில்லை; தேவப் பெருமாளை ஸேவிக்கிறாலுங்கூட மணவாளமாமுனிகளென்கிற நினைவோடு தான் ஸேவிக்கிறேன். [வரதன் என்கிற திருநாமத்தில் வரவரமுனியின் திருநாமத்திலேகதேசம் கலந்திருப்பதனால்.] (௧௯)

रचयतु कविजन इह बहुलां कृतिततिमनवधिगुणघटिताम् ।
वरमुनिगुणगणकथनपरा मम खलु कृतिरियमतिशयिनी ॥२०॥

இவ்வுலகில் பல கவிகள் மிகச் சிறந்த பல பல நூல்களை இயற்றட்டும்; யார் எந்த நூல் இயற்றினாலும் மணவாள மாமுனிகளின் திவ்ய குணங்களைப் பேசப் பிறந்த என்னுடைய நூல் தான் ஓங்கியிருக்கும். (௨௰)

मुनिवर! तव शुभतनुमननं मम हृदि विलसति ननु सततम् ।
अत इह भुवि मम सकलमहो करतलमुपगतमिति सुदृढम् ॥२१॥

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய திருமேனியின் செழுமையே என்னுள்ளத்தின் இடைவிடாது நிலைத்திருக்கிறதால் இவ்வுலகில் என் கைக்கு எட்டாதது ஒன்றுமில்லை; நானே அனைத்தும் அமைந்த தனவான். (௨௧)

निरवधिनिरुपममहिमनिधे! वरमुनिवर तव शुभकृपया ।
अनुदिनमनुकलमुदयमियात् स्तुतिततिरनवधिगुणभरिता ॥२२॥

ஒப்பற்ற எண்ணில் பல் புகழ் வாய்ந்த மணவாளமா முனிகளே! தேவரீருடைய திருவருளால் நலம் மிகுந்த இத்தகைய ஸ்துதிகள் நாடோறும் விசேஷித்தோறும் அவதரித்துக் கொண்டே யிருக்க வேணும். (௨௨)

http://acharya.org

श्रीवैष्णवसौभाग्ये चतुर्थं

॥ श्रीशैलेशदयापात्रमङ्गलशासनम् ॥

:(O):

ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யத்தில்

ஸ்ரீசைலேச தயாபாத்ர மங்களாசாஸனம்.

श्रीशैलेशेतिमन्त्रस्थवर्णानुक्रमशोभितम् ।
वच्मि विद्वन्मनोहारि वरयोगीन्द्रमङ्गलम् ॥

ஸ்ரீசைலேசதயாபாத்ரத் தனியனிலுள்ள எழுத்துக்களின் அடைவே மணவாள மாமுனிகள் விஷயமான மங்களாசாஸனஸ்துதி இது.

श्रीशठारियतीशानश्रीसूक्त्यमृतपायिने ।
श्रीमत्सुन्दरजामातृमुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ १ ॥

ஆழ்வாரெம்பெருமானார் ஸ்ரீஸூக்திகளாகிற அமுதத்தையே பருகும் மணவாளமாமுனிகள் வாழ்க. (1)

शैशवात्प्रभृति श्रीमन्नारायणगुणाम्बुधौ ।
निमग्नहृदयायास्तु मुनिवर्याय मङ्गलम् ॥ २ ॥

http://acharya.org

இளமையே தொடங்கி பகவத்குணக் கடலில் ஆழ்ந்த மணவாளமாமுனிகள் வாழ்க. (2)

लेखने विशदव्याख्यानिबन्धानां पटीयसे ।
लेलिहानेन्द्ररूपाय मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ ४ ॥

மிகத் தெளிவான வியாக்கியானங்களை அருளிச்செய்யவல்ல ஆதிசேஷாம்சமான மாமுனிகள் வாழ்க. (3)

शठारिपरकालादिदिव्यसूरिसुधोक्तिभिः ।
सौरभान्वितवक्त्राय सौम्याचार्याय मङ्गलम् ॥ ५ ॥

நம்மாழ்வார் கலியன் முதலான ஆழ்வார்களின் அருளிச்செயல் மணம் கமழும் திருவாக்கையுடைய மணவாள மாமுனிகள் வாழ்க. (4)

दयापालमुनीन्द्रोक्तदिव्यग्रन्थार्थवर्षिणे ।
दयाब्धये मुनीन्द्राय दान्तश्रेष्ठाय मङ्गलम् ॥ ५ ॥

அருளாளப் பெருமாளெம்பெருமானாரருளிச் செய்த ஞானஸார ப்ரமேய ஸாரங்களை வியாக்கியானித்தருளின அருட்கடலான மணவாளமாமுனிகள் வாழ்க. (5)

यातायातश्रमं घोरसंसारमरुकानने ।
लुम्पते रम्यजामातृमुनिवर्याय मङ्गलम् ॥ ६ ॥

ஸம்ஸாரமென்னும் பாலைநிலத்தில் நாம் திரிந்துழல்வதைத் தொலைத்தருளின மணவாளமாமுனிகள் வாழ்க.

http://acharya.org

पादाब्जप्रवणाश्रित्यं पादाम्भोरुहपावना ।
पुनते पुण्ययशसे पूज्यश्रेष्ठाय मङ्गलम् ॥ ७ ॥

திருவடி பணிந்தார்க்கு நித்யமும் ஸ்ரீபாத தீர்த்தம் அளித்தருளித் தூய்மை பெறுவித்த மாமுனிகள் வாழ்க. (7)

श्रुत्यन्तार्थानशेषेण तत्त्वत्रितयटीकया ।
विवृण्वते मुनीन्द्राय महते नित्यमङ्गलम् ॥ ८ ॥

தத்வத்ரய வியாக்யான முகத்தால் வேதாந்தப் பொருள்களை விவரித்தருளின மாமுனிகள் வாழ்க. (8)

धीमद्भिर्वरदार्यादिगुरुभिस्सेविताङ्घ्रये ।
धीराय रम्यजामातृमुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ ९ ॥

கோயிலண்ணன் முதலான பெரியார்கள் அடிபணியப் பெற்ற மஹா தீரரான மணவாளமாமுனிகள் வாழ்க. (9)

भयं भवाब्धिमग्नानां समुन्मूलयते सताम् ।
भव्याय रम्यजामातृमुनये नित्यमङ्गलम् ॥ १० ॥

பிறவிக் கடலில் மூழ்கினவர்களின் அச்சத்தை அறவே போக்கியருளின மணவாளமாமுனிகள் வாழ்க. (10)

यातनां नरकेऽस्माकं यः कृपाम्बुधिरच्छिनत् ।
यतीन्द्रप्रवणायास्मै मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ ११ ॥

http://acharya.org

நரகத்தில் நோகக்கூடிய வேதனை யொன்றும் நமக்கு
சேராதபடி யருள்செய்த மணவாளமாமுனிகள் வாழ்க.

दिव्यसूक्तिसुधास्वादप्रफुल्लमनसे सदा ।
दिव्यामलमुखायास्तु देशिकेन्द्राय मङ्गलम् ॥ १२ ॥

அருளிச்செயலமுதத்தை அனவரதமும் பருகிக்களிக்
கின்ற மணவாளமாமுனிகள் வாழ்க. (12)

गुरूणामप्यशेषाणामग्रगण्याय योगिने ।
गुह्यानामर्थतत्त्वानां निधये नित्यमङ्गलम् ॥ १३ ॥

ஸகல ஆசார்யர்கட்கும் முன்னே எண்ணத்தகுந்த
அரும் ரஹஸ்யார்த்த நிதியுமான மாமுனிகள் வாழ்க.

गुणानामप्रमेयानां निधये भक्तबन्धवे ।
गुरूत्तमाय महते मुनये नित्यमङ्गलम् ॥ १४ ॥

அளவிறந்த திருக்குணங்கட்குக் கடல் போன்று
அடியார் திறத்துப் பரிவு பூண்ட மாமுனிகள் வாழ்க.(14)

अर्णवाय महार्थानामाश्चर्यमतिसम्पदे ।
अभिराममुनीन्द्राय गभीरायास्तु मङ्गलम् ॥ १५ ॥

சிறந்த அர்த்தங்களுக்குக் கடல் போன்று அற்புத
மான ஞானச் செல்வம் படைத்த மாமுனிகள் வாழ்க.(15)

वन्दे स्तौमि नमामीति क्रियाणां मुख्यलक्ष्यता ।
यस्मिन्नेव समुद्भाऽस्मै यमिश्रेष्ठाय मङ्गलम् ॥ १६ ॥

http://acharya.org

இறைஞ்சுகின்றேன் ஏத்துகின்றேன் வணங்குகின்றேன் என்றதற்கு முக்கிய இலக்கான மாமுனிகள் வாழ்க.

यच्छते शठजित्सूक्तिसहस्रार्थान् शतोक्तितः ।
यतीन्द्रमतदीपाय यतिश्रेष्ठाय मङ्गलम् ॥ १७ ॥

நூற்றந்தாதியினால் திருவாய்மொழி ஆயிரத்தின் பொருளை அளித்த, எம்பெருமானார் தரிசன விளக்கான மாமுனிகள் வாழ்க. (17)

तीर्त्वा संसारवाराशिं सिसेविषुभिरच्युतम् ।
सेव्याय सौम्यजामातृमुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ १८ ॥

பிறவிக்கடலைக் கடந்து பரவாஸுதேவனை ஸேவிக்க விருப்பமுடையவர்களால் ஸேவிக்கப்பட வேண்டிய மாமுனிகள் வாழ்க. (18)

द्रवीभवति यत्सूक्तिध्यानेन हृदयं सताम् ।
द्राविडाम्नायभाष्याय तस्मै प्राज्ञाय मङ्गलम् ॥ १९ ॥

தம்முடைய ஸ்ரீஸூக்திகளைச் சிந்திப்பாருடைய உள்ளத்தை உருக்குமவரும், அருளிச் செயல்களின் பாஷ்யமே வடிவெடுத்தவருமான மாமுனிகள் வாழ்க. (19)

प्रलयेऽपि न लीयेत यन्मन्त्रविभवो भुवि ।
तस्मै प्रख्यातयशसे पुण्यश्लोकाय मङ्गलम् ॥ २० ॥

பிரளயத்திலும் அழியமாட்டாத தனியன் வைபவம்

http://acharya.org

பெற்ற, உலகம் நிறைந்த புகழாளரான மாமுனிகள் வாழ்க.

वचोभूषणतत्त्वार्थविवृत्योत्फुल्लकीर्तये ।
विदिताशेषवेद्याय वदान्यायास्तु मङ्गलम् ॥ २१ ॥

ஸ்ரீவசன பூஷணத்தின் உண்மைப்பொருளை புணர்த்தும் வியாக்கியானத்தை யருளிச்செய்து புகழ்மிக்கவரும் எல்லாமறிந்தவரும் பரமோதாரருமான மாமுனிகள் வாழ்க.(21)

परमुख्यान्वर्थनिष्ठा यद्धृदये सुप्रतिष्ठिता ।
सर्वोत्तमाय तस्मै स्यात्सौम्याचार्याय मङ्गलम् ॥ २२ ॥

முதாதுவின் பொருளான வணக்கத்தில் ஊற்றமே நெஞ்சில் குடிகொண்டிருக்கப்பெற்ற ஆசார்ய சிகாமணி வாழ்க.

वसिष्ठादिमहायोगिवचोभ्योऽतिगरीयसीः ।
वाचो दत्तवते योगिवरेण्यायास्तु मङ्गलम् ॥ २३ ॥

வஸிஷ்டாதி மஹர்ஷிகளின் வாக்கைக் காட்டிலும் மிகச் சிறந்த ஸ்ரீஸூக்திகளை யருளிச்செய்த மாமுனிகள் வாழ்க. (23)

देशिकानामशेषाणामावेशोऽयं न संशयः ।
इत्यभिज्ञाभिनन्द्याय गुरुवर्याय मङ्गलम् ॥ २४ ॥

'எல்லா ஆசாரியர்களும் ஒன்று சேர்ந்து உதிக்கப்பெற்றவர்' என்று மஹான்கள் போற்றும் மாமுனிகள் வாழ்க.

[illegible]ान्वेषिजनानामप्यन्वयोक्तिद्रवीयसीः ।
[illegible]वते सौम्यमुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ २५ ॥

http://acharya.org

என்ன தப்பு கிடைக்குமென்று தேடிப் பார்த்து தூஷிப்பதிலேயே கண்ணானவர்களுக்கும் நிலமல்லாத நிரவத்ய ஸ்ரீஸூக்திகளை பணித்த மாமுனிகள் வாழ்க. (25)

यतिप्रवरभाष्यार्थभरितोक्तिप्रदायिने ।
यतिभिस्त्रिभिरीड्याय यतिवर्याय मङ्गलम् ॥ २६ ॥

ஸ்ரீபாஷ்யார்த்தங்கள் நிரம்பிய ஸ்ரீஸூக்திகளைத் தந்தருளினவரும், வானமாமலை ஜீயர் பட்டர்பிரான் ஜீயர் திருவேங்கட ராமானுஜ ஜீயராகிய மூவரால் துதி செய்யப் பெற்றவருமான மாமுனிகள் வாழ்க. (26)

जाग्रद्दशायामात्मीयदिव्यमङ्गलविग्रहम् ।
प्रदर्शितवते मह्यं प्राज्ञभोग्याय मङ्गलम् ॥ २७ ॥

கனவிலன்றிக்கே நனவிலேயே அடியேனுக்கு ஸேவை ஸாதித்தருளின மணவாள மாமுனிகள் வாழ்க.

माया दुरत्ययेत्येवं गीताचार्येण कीर्तिताम् ।
मायां ध्वस्तवते सद्भिर्माननीयाय मङ्गलम् ॥ २८ ॥

* மம மாயா துரத்யயா * என்று கீதையிற் சொன்ன மாயையைத் தொலைத்தருளின மாமுனிகள் வாழ்க. (28)

तत्त्वार्थं सर्वशास्त्राणां हस्तामलकसन्निभम् ।
अवधार्योचुषे विद्वदग्रगण्याय मङ्गलम् ॥ २९ ॥

ஸகல சாஸ்த்ர தத்துவப் பொருள்களையும் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கண்டு நிஸ்ஸந்தேஹமாக உரைத்தருளும் மணவாள மாமுனிகள் வாழ்க. (29)

http://acharya.org

रञ्जिताशेषचित्ताय भञ्जितध्वान्तराशये ।
मञ्जुवाणीविलासाय मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ ३० ॥

எல்லாருடைய நெஞ்சையும் உகப்பித்தவரும், அக விருளை அகற்றினவரும், அழகிய திருவாக்குக்களை யளித்தவருமான மணவாள மாமுனிகள் வாழ்க. (30)

मुखपङ्कजनिर्गच्छन्मधुसोदरसूक्तिभिः ।
मुमुक्षून् रक्षते नित्यं मुनिवर्याय मङ्गलम् ॥ ३१ ॥

திருவாய் மலர்ந்தருளும் தேன்மொழிகளாலே முமு க்ஷுக்களைக் காத்தருளும் மணவாள மாமுனிகள் வாழ்க.

नित्यकैङ्कर्यनिष्णातशेषावतरणात्मने ।
मुनये रम्यजामात्रे नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥ ३२ ॥

* சென்றாற்குடையா மிருந்தா லிப்படியே நித்ய கைங் கரியங்களிலே நிரதரான திருவனந்தாழ்வானே திருவவ தரித்தவரான மணவாளமாமுனிகள் வாழ்க வாழ்கவே.

मङ्गलाशासनं श्रीमद्वरयोगिगुणोज्ज्वलम् ।
निध्यायतां सतामस्तु नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥

மணவாள மாமுனிகளின் திருக்குணங்கள் திகழ் கின்ற இந்த மங்களாசாஸந ஸ்துதியைச் சிந்தை செய் வார்க்கு நித்யமங்களம்.

ஸ்ரீகாஞ்சி அண்ணங்கராசார்ய ஸ்ரீவைஷ்ணவதாஸன்
விண்ணப்பஞ் செய்த
ஸ்ரீசைலேசதயாபாத்ர மங்களாசாஸந ஸ்துதி
முற்றுப் பெற்றது.

http://acharya.org

श्रीवैष्णवसौभाग्ये पञ्चमं

॥ श्रीमद्वरवरमुनिकर्णामृतम् ॥

:(O):

ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யத்தில்

ஸ்ரீமத்வரவரமுநிகர்ணாம்ருதம்.

(அவதாரிகை) எம்பெருமான் விஷயத்தில் ஈடுபட்டவர்கள் "மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு" என்று சொல்லி மங்களாசாஸநம் செய்வதுபோல மணவாள மாமுனிகளிடத்தில் ஈடுபட்டவர்கள் "வரவரமுநிபதகமல! ஜய" என்று (வடமொழியில்) சொல்லி மங்களாசாஸநம் பண்ண ப்ராப்தமாகையாலே அந்த வாக்ய ஸந்நிவேசத்தைவிட்டு அதிலுள்ள அக்ஷரங்களின் அடைவே ஒரு ஸ்தோத்ரம் விஜ்ஞாபிக்கலாயிற்று. இதற்கு ஸ்ரீமத்வரவரமுநி கர்ணாம்ருதமென்று ஒரு பெரியார் நாமமிட்டருளினார். ரங்கநாயக ஸ்தோத்ரம் போலே இதுவும் லகுவான அக்ஷரங்களைக் கொண்டு பெற்றது.

वरवरमुनिपदकमल ! जयेत्यनुपमसुमहितचरणमिमम् ।
निजहृदि कलयत निगदत भोः तदुपरि विरचितवचनमिदम् ॥

'மணவாள மாமுனிகளின் திருவடித் தாமரையே! நீ வாழ்க' என்னும் பொருளதான "வரவரமுநிபதகமல!

http://acharya.org

றுவ * என்கிற இந்த வொரு பாதத்தையே சிந்தை செய் மின்; (அதற்குமேல் சக்தியிருந்தால்) இந்த பாதத்தின் வழுத்தடைவே அமைக்கப்பட்ட இந்த கர்ணாம்ருத ஸ்து தியையும் கண்டபாடம் செய்து சொல்லுமின்.

वरवरमुनिवर तव चरणौ स्थिरमिह मम मनसि परम् ।
सुनियतमुदयत इति वदतो मम खलु जनिरिह सुफलवती ॥१॥

மணவாள மாமுனிகளே! தேவரீருடைய திருவடி கள் அடியேனது மனத்தில் மாத்திரமே எப்போதும் ஸூர்யோதயமாறுப்போலே விளங்கிக் கொண்டிருக்கின் றன என்னவே அடியேனுடைய ஜன்மம் ஸபலமாயிற்று.

रविरिह घनघनतिमिरततीः क्षपयति बहिरिव न तु हृदये ।
गुरुवर मुनिवर हृदयगतं मम खलु तदखिलमपहरसि ॥ २ ॥

மணவாளமாமுனிகளே! ஸூர்யன் வெளியிருளை மாத்திரம் போக்கவல்லவனேயன்றி உள்ளிருளை யொழிக்க வல்லவனல்லன்; தேவரீர் அடியேனது அகவிருளையெல் லாம் அகற்றியருள்கின்றீர். (௨)

वचसि च मनसि च सततमपि स्वफणितिमनवधिमतिमधुराम् ।
कलयसि मम वरमुनिवर भोः ! भवभयपरिहृतिनिपुण गुरो ॥३

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய பரம மதுர மான ஸ்ரீஸூக்திகளையே ஸதா அடியேனுடைய வாக்குக் கும் நெஞ்சுக்கும் விஷயமாக்கியருளிற்று; இனியெனக்கு ஸம்ஸார பயம் கடைபாட விரகுண்டோ? (௩)

http://acharya.org

रघुवरयदुवरमुखभगवत्तनुततिरिह भुवि लसति परम् ।
विलसतु मम खलु नयनपथे मुनिवर तव शुभतनुरनिशम् ॥४॥

மணவாள மாமுனிகளே! இவ்வுலகில் ஸ்ரீராம க்ருஷ்ணாதி விக்ரஹங்களும் விளங்குகின்றன; தாராளமாக விளங்கட்டுமே; தேவரீருடைய திவ்ய மங்கள விக்ரஹ மொன்றே அடியேனது கண்ணுக்குத் தோற்றுவதாம்.

मुनिरिति गुरुरिति यतिरिति च प्रभजतु यश इह बहुजनता ।
मुनिगुरुयतिपदमखिलमपि स्फुटगुणमिह वरयमिनि परम् ॥५॥

முநியென்றும் குருவென்றும் யதியென்றும் இவ்வுலகில் மற்றும் பலரும் பேசப்பட்டிருந்தாலும் அந்த முநி-குரு-யதிபதங்களெல்லாம் மணவாளமாமுனிகள் திறத்திலே தான் அர்த்த புஷ்டியுடன் விளங்குவன. (௫)

निधिमिव निजहृदि निदधति ये वरमुनिवर तव फणितिततिम् ।
बहुजनिविरचितमघनिवहं क्षणलवविदलितमदधत ते ॥ ६ ॥

மணவாளமாமுனிகளே! தேவரீருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளை உள்ளத்துள் நிதிபோல வைத்துக் காக்க வல்லவர்கள் யாவரோ அவர்கள் பல பிறவிகளில் செய்த பாவங்களெல்லாம் ஒருநொடிப் பொழுதில் தொலையப் பெறுமவராவர்கள். (௬)

पटुमतिरिह भुवि तव फणितीरधिमुखमविरलमपि कलयन् ।
विलसति यदि वरमुनिवर तं जितमयमुख इति विरुदमुपैत् ॥७॥

இவ்வுலகில் விவேகியான வொருவன் தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளை குபாடம் வாய்க்கொள்வானாகில் அவன்

http://acharya.org

ஹயக்ரீவனை யென்றவனென்று புகழ் பெற்றவனேயாவன்.

दमशममुखगुणजलधिरिति प्रसृमरशुभतरनिजयशसा ।
सुरभितभुवनक मुनिवर भो मम हृदि लिख लिख तव फणितीः ॥

சமதமாதி குணக்கடலென்று பெற்ற புகழினால் உல கத்தை யெல்லாம் பரிமளிக்கச் செய்தருளாநின்ற மண வாள மாமுனிகளே! தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளை என்னுடைய நெஞ்சகம்பால் எழுதியருள வேணும். (௮)

कलिबलमनुदिनमधिकतमं प्रसरति बत बत भृशमिति मे ।
भयलवमपि न हि भजति मनो वरमुनिफणितिभिरतिविमलम् ॥

கலியின் கொடுமை நாள்தோறும் எவ்வளவு வளர்ந்து சென்றாலும் அதுபற்றி எனது நெஞ்சில் சிறிதும் அச்ச மில்லை. ஏனென்றால், மணவாள மாமுனிகளின் ஸ்ரீ ஸூக்திகளினால் என்னுள்ளம் தெளிவுபெற்றிருப்பதனால்.

मम मतिरिह भुवि बहुमतिभाक् विलसति मुनिवर शृणु कृपया ।
अविरतमयमिह तव फणितीः निजहृदि कलयति निधिवदिति ॥

மணவாள மாமுனிகளே! அடியேன் எப்போதும் தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளையே நெஞ்சில் நிதியாகக் கொண்டிருக்கிறே னென்பதுபற்றி அடியேனது புத்தி யைப் பலரும் கொண்டாடுகின்றனர், இஃது ஒக்கும். (௧௦)

लसति हि भुवि बहुगुरुजनवाक् फलमिह न किमपि भवति तया ।
मुनिवर यदि तव न भवति गीः ध्रुवमिव सुविपुलतिमिरमिह ॥

மணவாளமாமுனிகளே! இவ்வுலகில் மற்றும் பல

http://acharya.org

ஆசிரியர்களின் திருவாக்குகள் பல விளக்கினுலும் அவற்ருல் பயனென்றும் காணேம்; தேவரீருடைய ஸ்ரீஸூக்திகள் அவதரியாதிருந்தால் இருள் செறிந்தேயிருக்கும்.

जगदिदमनवधिगुरुभरितं भवति हि, भवतु च गुरुनियुतम् ।
शुभगुणवरवरमुनिगुरुराडयमिह निरुपमगुरुपदभाक् ॥ १२ ॥

இவ்வுலகமானது அளவுகடந்த ஆசாரியர்களை நிரம்பக் கொண்டது; இன்னமும் லக்ஷக்கணக்கான ஆசாரியர்கள் தோன்றட்டுமே; அதனாலென்ன? மணவாளமாமுனிகளொருவரே ஒப்பற்ற ஆசாரியர். (கஉ)

यतिपतिमतमिह विशदयितुं कृतजनिरिह भुवि वरमुनिराट् ।
विलसति मम हृदि परमकृपाजलनिधिरविरतममितमुदा ॥ १३ ॥

எம்பெருமானார் தர்சனத்தை விளங்கச் செய்வதற்கென்றே இந்நிலவுலகில் திருவவதரித்தருளின பேரருட்கடலான மணவாளமாமுனிகள் அடியேனுள்ளத்தில் மகிழ்ந்து உறைகின்ருர். (கங)

वरवरमुनिवरनवनमिदं गुणलवविरहितमपि विदुषाम् ।
हृदि मुदमनवधिमुपजनयेदिति दृढमहमिदमभिहितवान् ॥

மணவாளமாமுனிகள் விஷயமான இந்த ஸ்தோத்ரமானது ஒரு குணமுமற்றதாயினும் வித்வான்களின் உள்ளத்தில் மிக்க மகிழ்ச்சியைத் தருமென்பது திண்ணம்.

ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசார்ய ஸ்ரீஸ்வாமியவர்களின்
விண்ணப்பஞ் செய்த
ஸ்ரீமத்வரவரமுநி கர்ணாம்ருத ஸ்துதி
முற்றுப் பெற்றது.

http://acharya.org

श्रीवैष्णवसौभाग्ये षष्ठी

॥ श्रीवरवरमुनिनक्षत्रमाला ॥

(अन्तादिरूपा)

ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யத்தில்

ஸ்ரீவரவரமுநிநக்ஷத்ரமாலா.

(எழுத்தந்தாதி.)

श्रीमद्वरमुनीन्द्रार्यस्तुतिं नक्षत्रमालिकाम् ।
सात्त्विकानां सदा ध्येयां संतनोमि सतां मुदे ॥

श्रीमान् सुन्दरजामातृमुनिर्जीयाद्यदुक्तयः ।
अश्विनावप्यधःकृत्य चिकित्सां भुवि तन्वते ॥ १ ॥

(அச்வினீ.) * அச்விநௌ வை தேவாநாம் பிஷஜௌ * என்று வேதமோதினபடியே தேவதைகளின் மருத்துவர்களான அச்விநி தேவர்கட்கும் மேலாக, தம்முடைய ஸ்ரீஸூக்திகளினால் ஸம்ஸாரிகளுக்குச் சிறந்த சிகித்ஸையைச் செய்தருளும் மணவாளமாமுனிகள் வாழ்க. (௧)

भरणार्यमजैत्रवपुस्सुषमः करुणावरुणालयदिव्यमनाः ।
वकुलाभरणीयवचोरसिको वरयोगिवरश्शरणं भविनाम् ॥ २ ॥

http://acharya.org

(பாணி) திருமேனியொளியால் ஸூர்யனை வென்றவரும் கருணைக்கடலான திருவுள்ளமுடையவரும் திருவாய்மொழியின் கலையுணர்ந்தவருமான மணவாளமாமுனிகளே முமுக்ஷுக்களான ஸம்ஸாரிகளுக்குத் தஞ்சம்.

नानारुचिर्जन इहाश्रयते मुकुन्दं
स्कन्दं तथा पशुपतिं धृतकृत्तिकायम् ।
कामं तथा भजतु रम्यवरोपयन्तृ-
योगीन्द्रतोऽन्यमहमत्र न भावयेयम् ॥ ३ ॥

(க்ருத்திகை) * லோகோ பிந்நருசி: * ஆகையினாலே முகுந்தனைச் சிலரும் முருகனைச் சிலரும் முக்கண்ணனைச் சிலரும் ஆச்ரயிக்கக் காண்கிறோம்; யதேஷ்டமாக அப்படியே ஆச்ரயிக்கட்டும்; மணவாளமாமுனிகளைத் தவிர வேறொருவரையும் சிந்தையிற் கொள்ளேன் யான். [த்ருத க்ருத்தி காயம்] க்ருத்தியென்று யானைத் தோலுக்குப் பெயர்; தரிக்கப்பட்ட யானைத் தோலையுடைய உடம்புடையனான பசுபதியை என்றபடி. (௩)

यत्पादावभिरोहिणी हि भगवत्पादाब्जयोश्शाश्वती
यद्गात्रं कलशाम्बुराशिसुषमासंस्पर्धमानर्द्धिकम् ।
यद्वक्त्रं निरवद्यशास्त्रनिचयोद्यन्महासौरभं
सोऽयं भाति वरोपयन्तृयमिराट् चित्ते मदीयेऽनिशम् ॥

(ரோஹிணி.) அடியேனது உள்ளத்துள் எக்காலு முறைகின்ற மணவாளமாமுனிகளின் திருவடிகளானவை எம்பெருமானுடைய திருவடித் தாமரைகட்கு ஏணி போலும்; திருமேனிவிளக்கமானது பாற்கடலை எதிர்க்க

http://acharya.org

மில்லை; நிருப்பமானமானது ஸகல சாஸ்த்ர ஸாரார்த்த பரிமளமும் கமழ்விப்பது. (௪)

शशादिमृगशीर्षकेष्वपि भवेद्विषाणं क्वचित्
नभस्यपि कदाचनोद्गमियाच्च पङ्केरुहम् ।
न जातुचिदहो भवेद्वरवरस्य योगीशितुः
गभीरमधुरोक्तिषु ध्रुवमनयशङ्काङ्कुरः ॥ ५ ॥

(ம்ருகசீர்ஷம்.) முயல்முதலான சில ம்ருகங்களின் தலைகளில் கொம்பு முளைக்கவுமாம்; ஆகாசத்திலுமொரு கால் தாமரை முளைக்கவுமாம்; இங்ஙனே அஸம்பாவிதங்கள் ஸம்பவித்தாலும், மணவாளமாமுனிகளின் கம்பீர மதுர ஸ்ரீஸூக்திகளில் ஒருகாலும் அன்ய சங்கையும் ஸம்பவிக்கமாட்டாதென்பது திண்ணம். (௫)

रम्यवरयोगिवरसूक्तिरससेकैः
संततमिहास्तु मम साधु रसनाऽऽर्द्रा ।
ये खलु पवित्रतमगाङ्गजलसेकान्
अप्यहह ! मन्दयितुमत्र भुवि शक्ताः ॥ ६ ॥

(ஆர்த்ரா.) பரமபவித்திரமான கங்கைநீர்ப் பெருக்கையும் கீழ்ப்படுத்த வல்லதான மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திரஸப்பெருக்கினால் எனது நா எப்போதும் நன்கு நனைந்தே யிருக்கவேணும். (௬)

तातस्सर्वजनीन एष भगवान् मा नाम मां रक्षतात्
नैर्घृण्येन पुनः पुनर्वसुमतीकोपोऽत्र कामं क्षिपेत् ।

http://acharya.org

एतत्केवलमर्थये मुररिपुं श्रीरम्यजामातरि
स्वामिन्यद्भुतभक्तिभूषितहृदां वंशे समुत्पादय ॥ ७ ॥

(பூர்வஸா.) ஸர்வலோக ஹித ப்ரதானான எம்பெருமான் என்னைக் காக்கவேண்டா; திருவுள்ளத்தில் இரக்கமின்றிக்கே மேன்மேலும் இக் கொடுவுலகத்திலேயே என்னைத் தள்ளினாலும் தள்ளட்டும்; அப்பெருமானை அடியேன் யாசிப்பதொன்றே, மணவாள மாமுனிகளிடத்தில் பக்தி பூண்ட மஹான்களின் குலத்திலேயே என்னைப் பிறப்பிக்க வேணுமென்று. (எ)

यतस्व ननु सन्ततं वरमुनीन्द्रदिव्योक्तिभिः
सुधारससरीतिभिर्गमयितुं निजं जीवितम् ।
इतीह सुबहुर्जनो गुरुवरोपदिष्टोऽप्यहो
यतिष्य इति केवलं प्रतिवदन् भवे भ्राम्यति ॥ ८ ॥

(புஷ்பம்.) மணவாள மாமுனிகளின் அமுதமொழிகளைக் கொண்டே நித்யகாலக்ஷேபம் பண்ணும்படி பெரியார்கள் பலர்க்கு உபதேசித்தாலும், ஆகட்டும், பார்ப்போம் என்று சொல்லி வீண்போது போக்கிப் பிறவிக்கடலிலேயே அலைகின்றனரே! அந்தோ!
(இதில் நான்காம் பாதத்தில் யதிஷ்யபதம் புருஷவாசகம்)

तिरस्कृत्य प्राचामतिमधुरसंदेशमनघं
पलायध्वे भोभोः पिशितपुराश्लेषकुतुकात् ।
अमन्दानानन्दान् सृजति वरयोगीन्द्रफणिति-
प्रवाहे स्वादिष्ठे घटयत सकृद्वाऽपि रसनाम् ॥ ९ ॥

http://acharya.org

(ஆச்லேஷம்.) மேலையார் செய்யும் மருந்தாயான உப தேசங்களைப் பெறாமல் மாம்ஸ சரீர வைச்சேதை விரும் பத்தினால் இன்றுமன்றும் ஒழிபுமூல்கின் நீர்களே !, பேரின் பம் பயக்கும் மணவாள மாமுனிகளின் திவ்யஸூக்தி யமுத வெள்ளத்திலே ஒரு திவலையாவது நாக்கை நனைக்கலாகாதா ? (௯)

नार्हत्येवात्र नूनं हरिरपि भविनां मादृशानामघानि
प्रोद्धर्तुं, दैत्यरक्षोगणदलनकलामात्रदक्षो हि सोऽभूत् ।
एकस्सर्वज्ञचूडामणिरनघगुणो रम्यजामातृयोगी
दिव्यश्रीसूक्तितेजोविततिभिरतनोत् द्रागघध्वान्तशान्तिम् ॥

(மகம்.) எம்போல்வாருடைய பாவங்களைத் தொலைக்க எம்பெருமானும் வல்லனல்லன் ; அவன் அஸுரராக்ஷஸர் களைத் தொலைப்பதில் மாத்திரமே நிபுணன் ; ஸர்வஜ்ஞ ரான மணவாள மாமுனிகளொருவரே தமது திவ்ய ஸூக்திதேஜ:புஞ்ஜங்களினால் பாவங்களாகிற இருளைப் பாற்றியருளினர். (இதில் முதல்பாதத்தில் முடிவில் 'மகா' என்பது நக்ஷத்ரநாமம்.) (௰)

शान्तं कर्तुं संसृतिरोगं स्पृहयन्तः
पूर्वे फल्गुन्यौषधवर्गे हततृष्णाः ।
यत्सूक्त्योघे दिव्यमहाभेषजबुद्धिं
भेजुस्सोऽयं पातु सदा मां वरयोगी ॥ ११ ॥

(பூர்வ பல்குநீ.) ஸம்ஸார ரோகத்தைத் தொலைக்க விரும் பின முன்னோர்கள் அற்பமான மருந்துவர்க்கங்களில்

http://acharya.org

ஆசையற்றவர்களாய் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளையே அதற்கு மருந்தாகக் கொண்டனர். அந்த மாமுனிகள் என்னைக் காத்தருள்க. (இதில் இரண்டாம் பாதத்தில் 'பூர்வே பல்குத்வேன' என்பது நக்ஷத்ர நாமம். இது லேச நிர்த்தேசம்.) பல்கு — அற்பமான.

गीरेषा मम धन्यभावमतुलं धत्तेस्म यस्माद्दहो
दौर्भाग्योत्तरफल्गुनीचजनतास्तोत्रे विरक्तिं गता ।
श्रीमद्रम्यवरोपयन्तृयमिनः श्रीसूक्तिसौवादवं
निस्सीमाद्भुतवैभवं प्रतिकलं स्तोतुं समुज्जृम्भते ॥ १२ ॥

(உத்தர பல்குனீ.) என்னுடைய வாக்கு மிகவும் க்ருதார்த்த மாயிற்று. எதனாலென்றால், தௌர்ப்பாக்யம் மிகுந்த அஸார அல்பஜனங்களைத் துதிப்பதைவிட்டு மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தி மாதுர்யத்தையே துதிக்க எழுந்ததனால். (கஉ)

ते ते सन्तु परस्सहस्रफणितिस्तोमाः प्रणीताः परैः
किं ते श्रीवरयोगिवल्लभवचस्स्यैकेन दध्युस्तुलाम् ।
श्रीरङ्गेश्वरसंप्रकाशितमहामाहात्म्यसिन्धोर्गुरोः
अस्यैकां फणितिं मुखे कलयतां हस्तस्थितो माधवः ॥१३॥

(ஹஸ்தம்.) பிறர் பணித்த பல்லாயிரக் கணக்கான வாக்குக்கள் கிடக்கட்டும்; அவையனைத்தினாலும் கூடி மணவாள மாமுனிகளின் ஒரு ஸ்ரீஸூக்திக்கு ஒப்பாகுமோ? அழகிய மணவாளனால் உலகறிய விளக்கப்பட்ட மஹிமை வாய்ந்தவரான இந்த மாமுனிகளின் ஒரு ஸ்ரீஸூக்தியை

http://acharya.org

யாவது வாய்க்கொள்ளவல்லார்க்கு எம்பெருமான் காஸ்த்ருவன். (௧௩)

वरवरमुनिवर्यपादाब्जयुग्मैकसंबन्धिनां
जनिमृतिभवभीतिर्वैदेशिकत्वं तु निश्चयम् ।
प्रतिजनि यदि तत्पदाब्जैकसंबन्धसंपद्ध्रुवा
जनिततिरतिमात्रचित्राऽपि मां काममालीढतु ॥१४॥

(சித்ரா.) மணவாள மாமுனிகளின் திருவடி ஸம்பந்தம் பெற்றவர்களுக்குப் பிறப்பிறப்புக்கள் சேரா என்பது திண்ணம்; ஆயினும் பிறவிதோறும் மாமுனிகளின் திருவடி ஸம்பந்தச் செல்வமே நியதமாக வாய்க்குமாகில் பல பல விசித்திரமான பிறவிகளும் எனக்கு சேரலாம். (௧௪)

तुलायां मूलर्क्षे सकलजनसौभाग्यविभवात्
विभूत्यामेतस्यां समुदित यतीन्द्रप्रवण ! नः ।
क्षमस्वातीतानां समुदयमघानाम् अथ पुनः
मनो वाचं कायं प्रवणय भवत्सूक्तिनिवहे ॥१५॥

(ஸ்வாதீ.) உலகம் செய்த பாக்கியத்தினால், ஐப்பசியில் திருமூலத்தில் இவ்வுலகில் தோன்றிய மணவாள மாமுனிகளே! இதுவரையில் யாம் செய்த குற்றங்களை க்ஷமித்தருள்க; இனிமேல் ஒரு குற்றமும் ஏற்படாதபடி எமது மனோவாக் காயங்களை தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளிலேயே ப்ரவணமாக்கியருளவேணும். (௧௫)

हरिरिह भुवि रङ्गधामा स्वयं रम्ययोगीश्वरात्
उपनिषदनुधाविशाखासहस्रं शठारीरितम् ।

http://acharya.org

बहुगुरुवरभाष्यसारार्थसंदोहसंबुभुक्षितं
निजहृदि निनिधित्सुरात्मानमाधत्त शिष्योत्तमम् ॥१६॥

(விசாகா.) ஸ்ரீரங்கராஜன் உபநிஷத்திற்குத் தோள் திண்டியான [ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமமான] திருவாய்மொழியை அநேக வியாக்கியான விசேஷப் பொருள்களுடன் கேட்டுணர விரும்பி மணவாள மாமுனிகளுக்குத் தன்னை சிஷ்யனாக்கிக் கொண்டான். (கசு)

महीयान् योगीन्द्रस्स खलु मनुरथातुमवनौ
प्रतिष्ठां धर्माणां यदवदत तद्भेषजमिति ।
श्रुतिर्ब्रूतां कामं, वरवरमुनीन्द्रोक्तिनिकरात्
प्रशंसन्ति प्राज्ञाः किमपि न परं भेषजवरम् ॥ १७ ॥

(அநூராதா.) மநு என்கிற மஹர்ஷியானவர் தருமஸ்தாபகார்த்தமாகச் சொல்லியிருப்பதெல்லாம் மருந்து என்று * யத் வை கிஞ்ச மநுரவதத் தத் பேஷஜம் * என்கிற வாக்யத்தினால் வேதஞ் சொல்லிற்று; ஆனாலும் மணவாள மாமுனிகளின் திவ்ய ஸூக்திகளுக்கு மேற்பட்ட மருந்து ஒன்றிருப்பதாக மாஞானிகள் மதியார்.

रङ्गश्रीश्वरगीतपद्यविशदव्याख्यातुरस्मद्योगिनः
पादाब्जाश्रितशिष्यशिष्यपदयोस्सेवाऽप्यलं श्रेयसे ।
एवं सत्यपि हन्त येऽत्र विमुखा मुक्त्यन्तरान्वेषिणः
ते ज्येष्ठासविधालुसंपदमिह प्रेप्सोर्जनस्याग्रजाः ॥१८॥

(ஜ்யேஷ்டா.) ஸ்ரீரங்கராஜன் பணித்த தனியனால்

http://acharya.org

பரம்பின புகழுடையரான மணவாள மாமுனிகளை நேராக வணங்கப் பெறாவிடினும் அவருடைய ஸம்பந்த ஸம்பந்த ஸம்பந்திகளை வணங்கப் பெற்றாலும் நன்மை பெறக் குறையில்லை; இங்ஙனே உண்மையிருக்கவும் மாமுனிகள் பக்கலில் விமுகர்களாய் வேறு ஆசிரியரைத் தேடுமவர்கள் மூதேவியிடத்தில் செல்வம்பெற நினைப்பார்க்குத் துணைவரேயாவர். (கஅ)

जन्मशुद्धवैष्णवाग्र्यमानसोदयदप्रमेयमोदमूलम्

अद्वितीयभक्तियुक्तदिव्यसूरिसूक्तितत्त्वबोधमूलम् ।

लक्ष्मणार्यदर्शनीयनिस्तुलार्थरत्नराशिजीवमूलम्

अत्र सुन्दरोपयन्तृयोगिवर्यनिस्तुलावतारमूलम् ॥१९॥

(திருமூலம்.) மணவாள மாமுனிகளின் திருவவதார நன்னாளாகிய மூல நக்ஷத்ரமானது — இயற்கையில் பவித்திரர்களான ஸ்ரீவைஷ்ணவர்களின் நெஞ்சில் தோன்றும் பேரின்பத்திற்கு மூலம்; மிகச் சிறந்த பக்தர்களான ஆழ்வார்களின் அருளிச்செயல்களின் உண்மைப்பொருளை யுணர்வதற்கு மூலம்; எம்பெருமானார் தர்சனத்திலுள்ள ஆழ் பொருள்கள் உயிர் பெறுதற்கு மூலம். (க௯)

मूर्तिरपूर्वाषाढगृहीतिस्फुटशोभा

वामनरूपा या बलिचित्तं हरतिस्म ।

सा तु मदग्रे तिष्ठतु कामं न हि सा मे

हर्तुमलं हृद्रम्यमुनीन्द्रप्रतिपक्षम् ॥ २० ॥

(பூர்வாஷாடம்.) பலாச தண்டத்தைக் கைபிடிக்கி

http://acharya.org

அழகுபெற்ற அபூர்வமான வாமனமூர்த்தியானது மாவலியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதென்கிறார்கள்; அந்த மூர்த்தி என் கண்ணெதிரே வந்து நின்றாலும் மணவாள மாமுனிகளிடத்தில் ஈடுபட்ட எனது நெஞ்சைக் கவரமாட்டாததேயாம். (அபூர்வா, ஆஷாடக்ருதிர் ஸ்புடசோபா என்று பதவிபாகம். பலாச தண்டிக்கு ஆஷாடமென்று பெயர். இச் ச்லோகத்தின் முடிவில் லகாரத்திற்கு அடுத்த மகாரம் இந்த ச்லோகத்தின் முதலெழுத்தாய் நின்றது; ஆகவே அந்தாதித் தொடைக்கு பங்கமில்லை.) (௨0)

नासहन्त पदहो सदषाढा इत्यदश्श्रुतिवचोनुगुणं ये ।
रम्ययोगिविभवान्न सहन्ते तानषाढपदतः कथयेयम् ॥

(உத்தராஷாடம்.) யஜுர்வேதத்தில் முதலஷ்டகத்தில் ஐந்தாவது ப்ரச்நத்தில் நக்ஷத்ரங்களின் நாமங்களுக்கு நிருக்தி காட்டுமிடத்து * யந் நாஸஹந்த, தத ஷாடா: * என்று ஓதிற்று. ஸஹியாதவர்களுக்கு 'அஷாடா:' என்று பெயரானதாகச் சொல்லிற்று. ஸஹியாதவர்களென்றால் பொறுமைக்காரர்களென்றபடி. இந்த ச்ருதியின்படி, மணவாள மாமுனிகளின் வைபவங்களைப் பொறுத பாவிகளை நாம் அஷாடமென்போம். (இந்த ச்லோகத்தில் அஷாடபதம் இரட்டித்து வந்தது உத்தராஷாட கமகம்.) (௨௧)

यन्मन्त्रश्रवणकुतूहलं धरित्र्यामर्चासूर्तिषु निखिलासु नित्यमिन्धे ।
सोऽयं श्रीवरवरयोगिदेवमन्त्रस्सर्वेषाममलमिह चित्तशोधनाय ॥२२

http://acharya.org

(ச்ரவணம்.) மணவாள மாமுனிகளின் தனியனையே ஸகல திவ்யதேசத்தெம்பெருமான்களும் திருச்செவி சாத்தக் குதூஹலம் கொண்டிருக்கின்றபடியை கண்டு உணரப்பெற்றால் உள்ளம் சுத்தமாகும். (உஉ)

यतिपतिपदपद्मसंबन्धनिष्ठागरिष्ठात्मनाम्
अपि वरवरयोगिपादारविन्दानुबन्धो न चेत् ।
न भवति गतिरुत्तमेति प्रतीत्या महान्तः पुरा
वरमुनिपदपद्ममाश्रित्य संप्रापुरुज्जीवनम् ॥ २३ ॥

(தநிஷ்டா.) உடையவருடைய திருவடி ஸம்பந்தம் பெற்றவர்களுக்கும் மணவாள மாமுனிகளின் திருவடி ஸம்பந்தம் இல்லையானால் உயர்கதியில்லை என்கிற அத்யவஸாயம் கொண்ட முன்னோர்கள் மாமுனிகளின் திருவடிகளையே ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பெற்றார்கள். (உ௩)

नरजनिमुपयाता नित्यरोगोपमर्दाः
दशशतभिषगंघ्रीन् संश्रयन्तो भ्रमन्ति ।
अहमिह वरयोगिश्रीपदाम्भोजरेणून्
हृदि कलयितुमिच्छन् सर्वरोगैर्विमुक्त्यै ॥ २४ ॥

(சதபிஷக்) மானிடராய்ப் பிறந்தவர்கள் நிச்சலும் நோயாளிகளாய் ஆயிரம் வைத்தியர்களை அடிபணிந்து உழல்கின்றனர்; அடியேனோ வென்னில், மணவாள மாமுனிகளின் ஸ்ரீபாத ரேணுக்களை நெஞ்சிற்கொள்ள நினைத்தவளவிலேயே நோய்களெல்லாம் தீரப்பெறுகின்றேன். (உ௪)

http://acharya.org

येऽपूर्वभद्रपदवीमिह लब्धुकामाः
ते रम्ययोगिपदभक्तपरीहितार्थान् ।
संसाधयेयुरिह चेदथ तैस्तु सद्यः
प्राप्येत सेति नियमोऽत्र न जातु लोके ॥ २५ ॥

(பூர்வபத்ரா) இவ்வுலகில் [அதிகாரஸ்தானங்களில்] உயர்ந்த பதவிகளைப்பெற விரும்புமவர்கள் மணவாள மாமுனிகளினடியார்க்கு நன்மை செய்வரேல் உடனே அவர்கள் உயர்ந்த பதவிகளில் ஏறப் பெறுவர்களென்பது திண்ணம். [இது ப்ரத்யக்ஷாநுபவஸித்தம்.] (உரு)

लोकोत्तरभद्रपदस्थितिमप्युत्सृज्य चिरं वरयोगिगुरोः ।
सद्भक्तगृहाङ्गणकिङ्करतां दासो मुहुरिच्छति लब्धुमसौ ॥ २६ ॥

(உத்தரபத்ரா) லோகோத்தரமாய் மங்களமான பதவி கிடைத்தாலும் அதிலிருப்பதை விட்டு மணவாள மாமுனிகளினடியார்களின் திருமாளிகைகளில் பணிவிடை செய்யவே அடியேன் காதலிப்பது. (உசு)

सौमित्रिरेवतीर्थौ श्रीरामानुजवरोपयन्तृमुनी ।
इत्यवतारांश्चतुरः चतुरः कृतवान् फणीन्द्र एव परम् ॥२७॥

(ரேவதீ) இளையபெருமாள், நம்பி மூத்தபிரான், எம்பெருமானார், மணவாள மாமுனிகள் என்கிற நான்கு அவதாரங்களைச் செய்த திருவனந்தாழ்வானே சதுரன்.

नक्षत्रमालां वरयोगिवर्यप्रभावसंकीर्तनसंमयीनाम् ।
नित्यं मुखे बिभ्रति ये महान्तः ते तारकापीठमदुज्ज्वलेयुः ॥

ஸ்ரீமத் வரவரமுநி நக்ஷத்ரமாலை முற்றிற்று.

http://acharya.org

श्रीवैष्णवसौभाग्ये

श्रीवरवरमुनि वारमाला

ஸ்ரீவரவரமுநி வாரமாலா.

सौम्यजामातृयोगीन्द्रसद्गुणस्तोमभूषिताम् ।
वारमालामिमां सन्ति साश्रा हृदि बिभ्रतु ॥

आदित्योऽयं शुन्यवर्तापः किमिहेति
प्राङ्स्वैरुल्लिखितो यो विराज ।
सोऽयं श्रीमत्सुन्दरयोगी गुरुवर्यः
तेजः किञ्चिद्दासजनेऽस्मिन्निदधातु ॥ १ ॥

सोमो भूमौ रम्यमुनीन्द्रः किमु जज्ञे ?
नैवैतस्मिन्नस्ति कलङ्कस्थितिवार्ता ।
नापि ह्रासो नैव च दोषाकरभावो
नो दुर्दैवाश्लेषकथा तत्कथमिन्दुः ॥ २ ॥

पूर्वे सर्वे देशिकवर्याः शुभचर्याः
यन्मूर्त्यांऽत्र प्रादुरभूवन् समवेताः ।
तैर्नैतेन श्रीवरयोगिप्रवरेण
श्रीमान् रङ्गी मङ्गलवाराब्धिविरासीत् ॥ ३ ॥

http://acharya.org

सर्वस्वामी सौम्यवराख्यो मुनिवर्यः
स्वीयश्रीपादाम्बुजतीर्थं सुपवित्रम् ।
अस्मत्पूर्वाचार्यवराय प्रदिशन् सन्
दिव्यज्ञानं तस्य समृद्धं तनुतेस्म ॥ ४ ॥

भूयांसोऽस्यां बिभ्रति भूमौ गुरुशब्दं
प्रायो रूढिस्तत्र भवेदित्यवधार्यम् ।
योगार्थस्य प्रेक्षणमस्मिन् सुशकं स्यात्
एकस्मिन् श्रीसुन्दरजामातृमुनीन्द्रे ॥ ५ ॥

काव्यालङ्कारादि पठित्वा कवितायां
वैचक्षण्यं ये दधुरेते निजवाणीम् ।
योगीन्द्रेऽस्मिन् रम्यवरे चेद्विनियुक्तां
कुर्युः श्रेयः प्राप्तुमनन्तं प्रभवेयुः ॥ ६ ॥

भूयिष्ठोक्त्या किन्तु फलं स्यात् शृणुतैतत्
जन्मन्यस्मिन् यस्तु सकृद्वा हृदयं स्वम् ।
सक्तं कुर्याद्रम्यमुनीन्द्रे गुणसिन्धौ
मन्दप्रज्ञोऽप्येष मनीषिप्रवरः स्यात् ॥ ७ ॥

वरयोगिमनोरम्यां वाग्मालामिमां पठन् ।
वारंवारमनर्थौघान् वारयेद्भववारिधौ ॥

http://acharya.org

श्रीवैष्णवसौभाग्ये

॥ श्रीवरवरमुनितिथिमाला ॥

(अक्षरान्तादिः)

श्रीमति वरवरयोगिन्यद्भुतवैदुष्यशेवधौ भक्ताः ।
ये ते सात्त्विकगोष्ठ्यां प्रथमां गणनां भजन्ति नियमेन ॥१॥

नश्वरपुमर्थवाञ्छां विसृज्य वरयोगिदिव्यभक्तिषु ये ।
प्रेमप्रकर्षभरितास्तेषां शुभकीर्तिरद्वितीया स्यात् ॥ २ ॥

स्यादिह वरवरयोगी सततं मय्येव करुणया भरितः ।
यस्याः प्रभावभूम्ना सपदि * तृतीया दृगन्तरुन्मिषति ॥ ३

तिमिरं निरसितुमवनौ तदातदा जन्म कुर्वतः फणिनः ।
यन्मूर्तिरिह $ चतुर्थी तं वरयोगीन्द्रमनिशं स्तुमहे ॥ ४ ॥

एतत्प्रपञ्चमीशो विष्णुः कृपयाऽभिरक्षतीति मृषा ।
सत्यं वरवरयोगी स्वकीयदिव्योक्तिततिभिरभिरक्षी ॥५॥

क्षित्यां वदन्ति भोग्यं पञ्चामृतनाम वस्तु तच्चास्तु ।
वरवरमुनीन्द्रसूक्तिषष्ठी धाराऽमृतस्य सत्यमिदम् ॥ ६ ॥

दमितेन्द्रियाः प्रसिद्धाः ऋषयोऽपि च सप्त मीनकेतुशरैः ।
बाध्यन्त एव नियतं वरवरयोगी परं विरक्ताग्र्यः ॥ ७ ॥

यस्याष्टमीन्दुसन्निभललाटलसदूर्ध्वपुण्ड्ररेखैव ।
सर्वेषु दिव्यदेशेषूल्लसति चिरात् स पातु वरयोगी ॥ ८ ॥

---

* तृतीया दृक् = ज्ञानचक्षुः ।

$ नक्षत्रमालाया अन्तिमश्लोकेन व्याख्येयमेतत् ॥

http://acharya.org

गीर्वाणवाचि सततं मन्दमतीदृक् स्तुतीरहं रचयन् ।
रुचिरोपयन्तृमुनिवरसेवाहेवाकभरित एव स्याम् ॥ ९ ॥
स्यामपि चेदिह दशमीं दशामनुप्राप्त ईषदपि चित्तम् ।
श्रीमद्वरवरयोगिध्यानदरिद्रं न जातु मम भवतु ॥ १० ॥
तुष्यन्विवेकरेकादशीतिपाठीति § केवलं विप्रः ।
यदि वरमुनीन्द्रफणितिषु वैतृष्ण्यमियात्तदा स सर्वज्ञः ॥११॥
ज्ञानाधिकैकभोग्याः सूक्तीर्वरयोगिनिरचिताः पठताम् ।
परिपूर्णपारणा स्यात् तेषां द्वादश्यहो तिथिस्सकला ॥१२॥
लक्ष्मीपतेर्नियोगात् द्वादश जाता हि दिव्यसूरिवराः ।
अथ च त्रयोदशीयं मूर्तिर्वरयोगिरूपिणी रेजे ॥ १३ ॥
जेजेतु नाथमुनितश्चतुर्दशीमत्र जगति गुरुपीठीम् ।
योऽलंकृत्य विलक्षणकीर्तिर्विरराज स वरवरयोगी ॥१४॥
श्रीभिरमृतोपमाभिः कलानिधेरस्य वरवरस्य मुनेः ।
ध्वस्ततिमिरा धरित्री सततञ्च विभाति पौर्णमासीव ॥१५॥
वर्णयितुमिव यतीश्वर § दर्शनमतिमात्रमुत्सुकास्सुधियः ।
श्रीमद्वरवरयोगि[illegible] क्षिपन्तु निजमायुः ॥ १६ ॥
श्रीमद्वरवरमुनिवरगुणगणविख्यापनार्थतिथिमालाम् ।
अनिशं पठतामतिर्यात् [illegible] ॥

---

§ अशीतिपाठीति प्रसिद्धिः [illegible] । विवेकरेकात् तुष्यन् = विवेकविरहेण [illegible] इति यावत् ।

§ दर्श इति अमावास्यासूचनम् ।

http://acharya.org

श्रीवैष्णवसौभाग्ये

॥ श्रीवरवरमुनिपक्षमाला ॥

युगलं वरमुनिपदयोस्सततं हृदये विचिन्तयेद्बुधः ।
यशसा जगदिदमखिलं शुक्लयितुं ते ध्रुवं प्रवीणास्स्युः ॥
स्यूतां वरवरमुनिवरशुभगुणमुक्ताफलैरिमां मालाम् ।
कलयत सदैव कण्ठे कृष्णो भगवान् शुभानि वितरेद्वः ॥

पक्षमालामिमां वाचि शिक्षमाणेषु सादरम् ।
पक्षपाती भवेद्विष्णुः वक्षसा चाद्रियेत तान् ॥

श्रीवैष्णवसौभाग्ये

॥ श्रीवरवरमुनि माससमाला ॥

(ककाराद्यक्षरानुपूर्वी प्रायशः)

कलानामेष * सर्वासां निधिर्वरवरो मुनिः ।
करोतु सततं वासं कृपया मम मानसे ॥ १ ॥

खलानां दमनायैव कलयन्नुदयं भुवि ।
वरयोगीश्वरस्स्वामी वर्धतां पुरुषर्षभः ॥ २ ॥

* मेषराश्यादिनिर्देशः क्रमेण द्रष्टव्यः ।

http://acharya.org

गतिरेष फणीन्द्रो नः यो दिव्यमिथुनाज्ञया ।
रम्यजामातृयोगीन्द्ररूपी रक्षितवान् भुवम् ॥ ३ ॥

चरन्तु वक्रगतयः¶ कर्कटा इव केचन ।
